பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | தை 09 | திங்கட்கிழமை 22.01.2018 | கதிர் 78

## கஞ்சாவுடன் யாத்திரை!

கேரளகஞ்சாவுடன், சிவனொளி பாதமலைக்கு யாத்திரை வந்த, 22 பேர் ஹட்டன் குற்றத் தடுப்பு பிரிவினரால்கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவுஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள தியகல பக்கம் 18

# அரசின் அரசியல் மோசடிகளை மறைக்கவே சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி

## சாடுகின்றார் கஜேந்திரகுமார்



வாழைச்சேனை, ஜனவரி 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழுங்கப்பட்டமை இந்த அர சாங்கம் செய்யும் அரசியல் மோசடிகளை மூடி மறைப்பதற்கே என்று தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை – கோறளைப்பற்று பிரதேச சபைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் பக்கம் 18

## கதிர்காமத்தில் பொலிஸ் சுட்டு ஒருவர் பலி; அதன் பின் பொலிஸ் நிலையம் முன் களேபரம்!

### கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு; 13 பெண்கள் உட்பட 58 பேர் கைது

கதிர்காமம், ஜன.22

கதிர்காமத்தில் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார் எனக் கூறப்படும் சம்பவத்தை அடுத்து, வெகுண்டெழுந்த பொதுமக்கள் பக்கம் 18



## தேர்தல் ஆணையர் கூலுக்கு அச்சுறுத்தல்; பொலிஸ் விசாரணையில் மணிவண்ணன்!



- எஸ்.நிதர்ஷன் -

தேர்தல் ஆணையாளர் இரட்ணஜீவன் கூல் தமக்கு எதிராகச் செயற்படுகிறார் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், அவர்களது குற்றச்சாட்டுக்கு எதிராகவும் அவை தனக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன எனத் தெரிவித்தும் இரட்ணஜீவன் கூலும் தேர்தல் ஆணைக் குழுவிற்கும் பொலிஸாருக்கும் அறிவித்திருக்கின்றார்.

இதனடிப்படையில் நேற்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி மணிவண் ணண் யாழ் பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு மேற்படி சம்பவம் தொடர்பில் முதற்கட்ட விசாரணையாக பொலிஸாரால் அவரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

தமிழ்த்தேசியப்பேரவைக்கு எதிராகத் தேர் பக்கம் 18



## ஆனைக்கோட்டையில் வயோதிப மாது கொலை

- எஸ்.நிதர்ஷன் -

தனிமையில் வீட்டில் வசித்துவந்தபெண்ணொருவர் நேற்றிரவு யாழ். ஆனைக்கோட்டைப்பகுதியில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனவும். இந்த மரணத்தில் சந்தேகங்கள் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆனைக்கோட்டை பொன்னையா வீதியிலுள்ள பக்கம் 18

## தெற்கில் இனிமேல் கலவரம் வராது; ஆனால் வட,கிழக்கில் நிலம் பறிபோகும்!



### முதல்வர் விக்கி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன.22

"1958 இல் நடந்தது போலவோ 1983 இல் நடந்தது போலவோ இனிமேல் ஒரு தடவை நடக்க வாய்ப்பில்லை.அரசாங்கம் இன்னொரு கலவரத்தை வரவிடாது. கலவரங்களை அடக்க போதுமான இரா பக்கம் 18

### பெண் அதிபரை முழங்காலில் நிறுத்திய சம்பவம்:

## ஊவா முதலமைச்சரிடமிருந்து கல்வி அமைச்சு விலக்கப்பட்டது

கொழும்பு, ஜன.22

ஊவா மாகாணத்தில் அந்த மாகாண முதலமைச்சரின் கீழ் இருந்த கல்வி அமைச்சு, ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய மாகாண ஆளுநரின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

கல்வி அமைச்சர் பொறுப்பிலிருந்து தற்காலிகமாகத் தாம் விலகிக் கொள்கின்றார் என முதலமைச்சர் சாமர சம்பத்தஸநாயக்காவும் அறிவித் பக்கம் 18

### இனிது ரகசியம் அல்ல!

நேற்றுக் காலையில் 'காலைக் கதிர்' நாளிதழ் பார்த்ததும் கூட்டமைப்புப் பிரகிருதி ஒருவர் கோபாவேசத்துடன் தொலை பேசியில் தொடர்புகொண்டார். அவர் ஒரு எம்.பியின் பக்கம் 18

## முதல்வர் விக்கியின் பெயரை வேட்பாளர்கள் பிரபலம் தேடப் பயன்படுத்துகின்றனராம்

பிரபலம் தேடுவதற்காகப் பல வேட்பாளர்கள் தனது பெயரைப் பயன்படுத்துகின்றனர் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளி பக்கம் 18

## கேப்பாபிலவில் நேபாள இராணுவத் தளபதி





இலங்கை வந்துள்ள நேபாள இராணுவத் தளபதி ஜெனரல் ராஜேந்திர செகேட்றி நேற்று முல்லைத்தீவு - கேப்பாபிலவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்துக்கும் விஜயம் செய்தார். அப்போது எடுக்கப்பட்ட படம். (மற்றொரு செய்தி 02ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நள்ளிரவில் திடீரெனக் கட்சி தாவிய மஹிந்த அணியின் வேட்பாளர்கள்!

கொழும்பு, ஜன. 22

ஏறாவூர் நகர சபைக்கு போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷவின் தாமரை மொட்டு அணியின்வேட்பாளர்கள்அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குத் தாவியுள்ளனர்.

இந்த திடீர் வருகை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நஸீர் அஹமட் முன்னிலையில் ஏறாவூரில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம் பெற்றது.





ஏறாவூர் நகர சபைக்கான வேட்பாளர் கே.எல். அக்கீல் அர்சாத் தலைமையிலான குழுவினர் கடைசி நேரம் வரை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தாமரை மொட்டு அணியின் வெற்றிக்காக பிரசாரங்களில் ஈடுபட்டு வந்திருந்த நிலையில், எவரும் எதிர்பாராத விதத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பி லான மு.காவுக்குத் தாவியுள் ளனர்.

திடீரென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சார மேடைக்கு வந்தமர்ந்த அவர்கள் அனைவரும் தாங்கள் நிபந்தனையின்றி இணைந்து கொள்கின்றமையோடு இந்த அணியின் வெற்றிக்காக பாடுபடவுள்ளோம் என நஸீர் அஹமட்டிடம் தெரிவித்தனர்.

எதிர்வரும் 26 ஆம் திகதி ஏறாவூர் உட்பட மட்டக்களப்பு மாவட்டத்தின் சில இடங்களுக்கு மஹிந்த வருகைதரவுள்ளார் என எதிர்பார்க்கப் பட்டிருந்த வேளையில் தாமரை மொட்டு வேட்பாளர்களின் இந்த கட்சித்தாவல் இடம்பெற்றுள்ளது.





வலிகாமம் தெற்கு பிரதேசபையின் 2 ஆம் வட்டாரத்திற்கான தேர்தல் பரப்புரையும் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பான விளக்கவுரையும் நேற்றுமுன்தினம் மயிலணி ஜனசக்தி சனசமூக முன்றிலில் இடம்பெற்றன. அதன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான சுதர்ஷன், லோகராஜன் ஆகியோருடன் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தாரத்தன், வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (இ)

## உள்ளூராட்சி தேர்தலில் வென்ற அடுத்த நாளே போதைப் பொருள் அனைத்தையும் ஒழிப்போம்!

கொழும்பு, ஜன. 22

நாட்டில் உள்ள நகரங்களில் இன்று ஹட்டன் நகரம் போதைப் பொருள்கள் விற்பனையாகும் ஒரு முக்கிய நகரமாக மாறியுள்ளது.

இதனால், எமது பிள்ளை களின் எதிர்காலம் கேள்விக் குறிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. வருகின்ற உள்ளூ ராட்சி தேர்தலில் வெற்றிபெற்ற உடனேயே ஹட்டனிலிலுள்ள போதைப்பொருள்களை ஒழித்து ஒரு தூய்மையான நகரமாக மாற்றியமைப்போம் என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளருமான ஆறுமுகன் தொண் டமான் தெரிவித்தார்.

ஹட்டன்டிக்கோயா நகரசபைக்கு ஆரியகம தொகுதியில் போட்டியிடும் வர்த்தகர் சோமசுந்தரம் ஹைலன்ஸ்கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ். விஜயசிங் ஆகிய இருவரையும் வாக்காளர்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வு ஹட்டன் தும்புறுகிரிய வீதியில் உள்ள வீடு ஒன்றில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



### ஆறுமுகன் தொண்டமான் கூறுகிறார்

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஹட்டன் நகரில்கட்டடங்களுக்கிடையில் நெருப்பு பாதுகாப்பு இடைவெளியில்லை. புதிதாகக் கட்டப்படும் கட்டடங்களும் அப்படிதான் இருக்கின்றன எங்கள் உறுப்பினர்கள் தெரிவான உடன் இவற்றுக்கான சரியான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்து இந்த நகரத்தை அபிவிருத்தி செய்வோம்.

இன்று கடைகள் வழங்குவதில் கூட ஒரு சில ஊழல்கள் காணப்பட்டுள்ளன எனவும் தெரியவந்துள்ளது.

தேர்தல் முடிந்தவுடன் யார் யார் எல்லாம் சம்பந்தப்பட்டிருக்கின்றார்களோ அவர்கள் அத்தனை பேருக்கும் எதிராக நடவடிக்கை எடுப்போம். அத்தோடு, கடந்த காலத்தில் ஹட்டன் நகரம் பல மாதக் கணக்காக குப்பைக்கூளங்களாகக் காணப்பட்டன.

அதனை ஒரு சில மணித்தியாலங்களில் நானே சுத்தம் செய்தேன். எனவே, நாங்கள் ஒரு போதும் அதை செய்து தருகிறோம் இதை செய்து தருகிறோம் என்று வாக்கு கேட்க வில்லை. வேலை செய்து விட்டுதான் வாக்கு கேட்கிறோம்.

இன்று சேவல் சின்னத்தில் போட்டியிடுபவர்களும் எதிலும் சலைத்தவர்கள் அல்லர். அவர்களும் மக்கள் சேவைகள் செய்து விட்டுதான் உங்களிடம் வாக்கு கேட்கிறார்கள். எனவே, சேவல் சின்னத்திற்கும் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் எனக்கு அளிக்கும் வாக்குகளே சேவல் சின்னதிற்கு சொந்தக் காரன் நான். எனவே சேவலுக்கு அளிக்கும் ஒவ் வொரு வாக்கும் எனக்கு அளிக்கும் வாக்குகளே என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## அஞ்சல்மூல வாக்களிப்பு இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 22

உள்ளூராட்சித் தேர்தலுக்கான அஞ்சல்மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமாகிறது என்று தேர்தல் ஆணைய பணிப்பாளர் நாயகம் ஆர்.எல். ஏ.எம். இரத்நாயக்க தெரிவித் துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றுகாவல்நிலையங்கள், பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்கள், தேர் தல் செயலகங்களில், அஞ்சல் மூல வாக்குகளை அளிக்க முடியும்.ஏனைய அரச நிறுவனங் களில் அஞ்சல் மூல வாக்களிப்பு எதிர் வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் இடம்பெறும். அஞ்சல் மூல வாக்களிப்பை கட்சி பிரதிநிதிகள் கண்கா ணிக்க முடியாது. எனினும், சுயேட்சைக் குழுக்களின் அல்லது அரசியல் கண்காணிப்பு அமைப்புகள் வாக்களிப்பை பார்வையிட முடியும்.

இம்முறை சுமார் 560,000 அரச பணியாளர்கள் அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

## நேபாள இராணுவத் தளபதி முல்லைத்தீவுக்கு விஜயம்!



கொழும்பு, ஜன. 22

நேபாள இராணுவத் தளபதி ஜெனரல் ராஜேந்திர செகேட்றி நேற்றுக் காலை முல்லைத்தீவு கேப்பாபிலவில் அமைந்துள்ள முல்லைத்தீவு பாதுகாப்பு படை தலைமையகத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

ஹெலிகொப்டர் மூலம் வருகை தந்த நேபாள இராணுவ தளபதி ஜெனரல் ராஜேந்திர செகேட்றியை முல்லைத்தீவு பாதுகாப்பு படைத்தளபதி மேஜர் ஜெனரல் துஷ்யந்த ராஜகுரு வரவேற்றார். அத்தோடு, இராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, இராணுவத் தளபதிகளுக்கிடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாற்றப்பட்டன. இராணுவ கட்டமைப்புக்கள் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துக் களும் பரிமாற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## திருக்குறள் மனனம், பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் புண்ணியநாச்சி அம்மையார் தினத்தையொட்டி நடத்தப்படும் திருக்குறள் மனனப்போட்டி, பண்ணிசைப் போட்டி என்பனஇந்த வருடமும் நடைபெறவுள்ளன. இவை தொடர்பான விதிகள் மற்றும் தகவல்கள் சபையால் வெளியிடப்படும்.

''இந்து சாசனம்'' பத்திரிகையில் விளம்பரப் படுத்தப்பட்டுள்ளதுடன் பத்திரிகை இதழ் பாடசாலைகளுக்கு அனுப்பப் பட்டுமுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரி அதிபர் மூலம் சபைக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும். போட்டிகள் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்றும் சபை செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்



# தூய்மையான அரசியல் தலைவன் தான் மட்டுமே என்றார் மைத்திரி

## நேற்று மட்டக்களப்பில் அவர் பிரகடனம்



**“மக்கள் பணத்தைக் கொள்ளையிட்டு அபிவிருத்தி என்ற பெயரில் மக்களின் பணத்தைத் திருடிய அரசியல் கலாசாரத்தினால் இன்று வேறு எந்தவொரு கட்சித் தலைவருக்கும் அரசியல் மேடைக்கு வந்து தாம் தூய்மையானவர்கள் என்றோ மக்கள் சார்பானவர்களென்றோ கூற முடியாது.” - என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

“இந்த நாட்டில் அரசியல் செய்ய வருகின்றவர்களில் நூற்றுக்கு ஐம்பது சதவீதமானவர்கள் மக்களின் பணத்தைக் களவாடுகின்றார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஊடாக நாடு முழுவதிலும் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் மக்கள் பணத்தைக் களவாடவோ, சூறையாடவோ நான் ஒருபோதும் இடமளிக்க மாட்டேன்.”

மட்டக்களப்பு – மாவடிவேம்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்–

இந்த நாட்டில் நல்ல படித்தவர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள், விஞ்ஞானிகள் உள்ளனர். குறைவில்லாத வளங்கள், வசதிகள், வாய்ப்புகள் இருந்தும் ஏன் இந்த நாடு முன்னேறவில்லை என மக்கள் எங்களைப் பார்த்து கேள்வி கேட்கின்றார்கள்.

இந்தநாட்டில்அரசியல்செய்ய வருகின்றவர்களில் நூற் றுக்கு ஐம்பது சதவீதமானவர்கள் மக்களின் பணத்தைச் சுருட்டுகின்றார்கள்.

2008 முதல் 2016 வரை மத்திய வங்கி ஊழல் மோசடியில் ஆயிரக்கணக்கான கோடி ரூபா கையாடல் செய்துள்ளார்கள். வேலை செய்யும் ஏழை மக்களின் ஊழியர் சேமலாபநிதி, வங்கிகளில் உள்ள வைப்பு, பல்லைக்கழக மாணவர்களின் மகாபொல புலமைப்பரிசில், வாழ்கை – வாகனக் காப்புறுதிப் பணம் என்பவற்றை கையாடல் செய்துள்ளார்கள்.

கள்வர்களைப் பிடிப்பதற்காக இலங்கை மத்திய வங்கி கணக்குகளை ஆராய்வதற்காக ஓர் ஆணைக்குழு, அரசியல்வாதிகள் பல மேசடிகளைச் செய்து சம்பாதித்த பணம் பற்றி அறிவதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு என இரண்டு ஆணைக்குழுக்களைக் கடந்த வருடம் நியமித்தேன்.

இந்த ஆணைக் குழுக்களின் அறிக்கைகளின் பிரகாரம் குற்றவாளிகள்எனக்கூறப்பட்டிருக்கும் அனைவருக்கும் எதிராகவும் நாங்கள் வழக்குத் தாக்கல் செய்வோம். எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களானாலும் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கமாட்டோம்.

இலவச மருத்துவம், இலவச கல்வி, வீதிகள், குளங்கள் புனரமைப்பதற்கான, தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான பணத்தையே கையாடல் செய்துள்ளார்கள். இந்தக் கள்வர்களுக்கு நீங்கள் மன்னிப்பு வழங்க வேண்டாம்; நானும் மன்னிப்பு வழங்கவே மாட்டேன்.

இந்த நாட்டிலே சுத்தமான அரசியல் கலாசாரத்தை உருவாக்க மக்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

சுதந்திரக் கட்சி அல்லாத வேறு கட்சிக்கு வாக்களிப்பதற்கு ஒருவர் நடவடிக்கை எடுப்பாரா யின் அது ஊழல் மோசடிக்கும் குடும்ப ஆதிக்கத்திற்கும் ஒத்துழைத்து நாட்டின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவே அமையும்.

நான் அதிகார ஆசை கொண்ட ஒருவனோ அல்லது ஜனாதிபதி பதவியில் சதா காலமும் நிலைத்திருக்க ஆசைப்பட்டு வந்த ஒருவனோ அல்லன்.

அதிகாரத்திற்கு வந்த அனைத்து ஜனாதிபதிகளும் அரசமைப்பில் ஏதேனும் திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள் என்று இருந்தால், அல்லது புதிய சட்டங்களை ஆற்றினார்கள் என்றிருந்தால், அது தமது ஜனாதிபதிப் பதவியின் அதிகாரங்களை பலப்படுத்துவதற்காக மட்டுமே ஆகும்.

பெயர் பலகைகளுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்த ஆணைக் குழுக்களை மக்கள் சார்பு ஆணைக்குழுக்களாக நான் மாற்றினேன். – என்றார் அவர்.

# யாழ். மற்றும் கல்பிட்டியில் விரைவில் கடல்நீரை குடிதண்ணீராக்கும் திட்டம்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தகவல்



கொழும்பு, ஜன.22

யாழ்ப்பாணம் மற்றும் கல்பிட்டிய பிரதேசங்களில் கடல் நீரைச் சுத்திகரித்து குடி தண்ணீராக்கும் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் ரவூப்ஹக்கீம்தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கல்பிட்டிய பிரதேச மக்கள் குடி தண்ணீருக்குப் படும் அவதியை நிவர்த்தி செய்யும் வகையில் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், அதற்காக வெளிநாட்டு நிதியுதவி பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர்மேலும்தெரிவித்துள்ளார்.

கல்பிட்டிய பிரதேசத்தில் நிலத்தடி நீரில் கலந்துள்ள இரசாயனங்கள் காரணமாக அதைக் குடி தண்ணீராகப் பயன்படுத்த முடியாதுள்ளது. அதே நேரம் கடல் நீரைச் சுத்திகரித்து குடி தண்ணீராக்கும் திட்டத்தைச் செயற்படுத்த ஏராளமான மின்சாரம் செலவாகும்.

இதன் காரணமாக கல்பிட்டிய பிரதேசத்தில் காற்றாடிகள் வழியாக மின்சார உற்பத்திக்கும் அதன் மூலம் கிடைக்கும் மேலதிக மின்சாரத்தைக் கொண்டு கடல்நீரைக் குடிநீராக சுத்திகரிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் நீர்வழங்கல் அமைச்சு தற்போதைக்கு ஜேர்மனிய நிறுவனம் ஒன்றுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கல்பிட்டியில் அமைந்துள்ள கடற்படை முகாம் அருகில் கடல்நீரை குடி தண்ணீராக சுத்திகரிப்பதற்கான மையம் அமைக்கப்படவுள்ளது.

இதனையொத்த செயற்பாடுகளின் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கடல்நீரை குடி தண்ணீராகச் சுத்திகரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க நீர்வழங்கல் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.– என்றும் கூறப்பட்டது.

### வங்கத்தில் முத்தரப்புத் தொடர்:

# ஸிம்பாப்வேயை நேற்று தோற்கடித்தது இலங்கை

வங்கதேசத்தில் நடைபெற்று வரும் முத்தரப்புத் தொடரில், ஸிம்பாப்வே அணிக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

வங்கதேசம், இலங்கை, ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் வங்கதேசத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் ஒவ்வொரு அணிகளும் மற்ற அணிகளுடன் தலா இரண்டு முறை மோத வேண்டும். முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

இந்நிலையில் கடந்த 17 –ஆம் திகதி ஸிம்பாப்வே அணிக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை தோல்வியை சந்தித்தது, அதைத் தொடர்ந்து 19 – ஆம் திகதி வங்கதேசத்திற்கு எதிரான ஆட்டத்திலும் தோல்வியை சந்தித்தது.

இதனால் நேற்றைய போட்டியிலும் இலங்கை அணி தோல்வியடைந்தால் தொடரில் இருந்து வெளியேற்றப்படும் என்ற நிலையில் இருந்தது.

டாக்காவில் நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற ஸிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதல் போட்டியில் ஸிம்பாப்வே அணிக்கு எதிராக தோல்வியைச் சந்தித்ததால், இப்போட்டியில் இலங்கை வீரர்கள் ஆக்ரோசமாக விளையாடினர்.

இலங்கை அணியின் பந்து வீச்சை தாக்கு பிடிக்க முடியாமல், ஸிம்பாப்வே அணி 44 ஓவர்களில் 198 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து ‘ஆல் அவுட்’ ஆனது.

எட்டக் கூடிய இலக்கை துரத்திய இலங்கை அணி ஒரு கட்டத்தில் 2 விக்கெட் இழப்பிற்கு 103 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் இருந்தது.

இலங்கை அணி வெற்றியை நோக்கிச் சென்ற நேரத்தில் அடுத்தத்து விக்கெட்டுக்களை இழக்க 34.4 ஓவரில் 145 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுக்களை இழந்தது. இதனால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

ஆனால் 6 ஆவது விக்கெட்டுக்கு சண்டிமல் உடன் திசாரா பெரேரா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப்பாக விளையாடி 44.5 ஓவரிலேயே 5 விக்கெட் இழப்பிற்கு 202 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# பொலிஸ் நிலையத்தில் நஞ்சருந்திய நபர்

கிளிநொச்சி, ஜன.22

கிளிநொச்சி – தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் வைத்து நஞ்சருந்தினார் என்று கூறப் படும் ஒருவர் கிளிநொச்சி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் வினவிய போது அவ்வாறன சம்பவம் ஒன்று நிகழ்ந்திருப்பதை அவர்கள் உறுதி செய்தனர்.

குடும்பத் தகராறு காரணமாகவே இது நிகழ்ந்திருப்பதாகப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் கூறினார்.

பகல் வேளையில் பொலிஸ் நிலையம் வந்த அந்த நபர் தம்முடன் உரையாடிக் கொண் டிருந்தார் எனவும் திடீரென அவர் நஞ்சை குடித்தார் எனவும் அவரைத் தாம் மீட்டு வைத்திய சாலையில் சேர்த்தார் எனவும் கான்ஸ்டபிள் கூறினார்.

# தன்னைத் தானேசுட்டு சிப்பாய் தற்கொலைமுயற்சி

கிளிநொச்சி – புநகரிப் பகுதியில் உள்ள 66 ஆவது படைத் தலைமையகத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்றுக் காலையில் தனது ரி – 56 ரகதுப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்வதற்கு முயன்றுள்ளார் எனக் கூறப்படுகிறது.

எனினும், அந்த சன்னம் அவரது இடதுகாலில் பட்டு அவர் காயமடைந்துள்ளார்.

சகசிப்பாய்கள் அவரை மீட்டு கிளிநொச்சிவைத்திய சாலையில் சேர்த்துள்ளனர்

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன எனக்கிளிநொச்சி இராணுவத் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத் துடன் சிறந்த முறையில் ஒட்டித் தரப்படும்

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 8680 077 592 5088

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நல்லாட்சிக்கு நெருக்கடி

'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' - என்பார்கள்.

நல்லாட்சி அரசின் முடிவுகாலத்துக்கான மணி ஓசையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே எழுப்பியிருக்கின்றார் என்று தோன்றுகின்றது.

"நாட்டின் பொருளாதார நிர்வாகத்தை ஐக்கிய தேசியக் கட்சித் தரப்பிடமிருந்து எடுத்து விட்டேன். அது இனி எனது நேரடிப் பொறுப்பில் இருக்கும்." - என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்திருக்கும் அதிரடி அரசியல் அறிவிப்பு, நல்லாட்சி அரசின் சாவுமணி என்று கருதத்தக்க விதத்தில் வந்திருக்கின்றது என்றே தோன்றுகின்றது.

நல்லாட்சி அரசின் கீழ் நாட்டின் பொருளாதார விடயங்களைக் கையாளும் பொறுப்பை ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் தாம் விட்டு வைத்திருந்தார் என்று கூறிய ஜனாதிபதி, அது முடிந்துவிட்டது, இனி அவர்களிடம் அது இருக்காது என்று தெளிவுபட - பகிரங்கமாக - அறிவித்திருக்கின்றமை அடுத்துவரும் தினங்களில், அல்லது வாரங்களில் பல்வேறு புதிய அரசியல் நிகழ்வுகள் கட்ட விழ்வதற்கு அடிகோலியிருக்கின்றது.

இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டு விட்டது, நடவடிக்கையும் ஆரம்பமாகி விட்டது என்ற தொனியில்தான் ஜனாதிபதியின் பேச்சு இருந்த போதிலும் -

இந்தப் பத்தி எழுதப்படும் இந்தக் கணம் வரையில், ஜனாதிபதியின் இத்தகைய தீர்மானத்துக்குச் செயலுருக் கொடுக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகவேயில்லை என்றுதான் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"நாட்டின் பொருளாதார விவகாரங்களை நான் பொறுப்பேற்பதற்கான முன் ஆயத்தமாகத் தேசிய பொருளாதார கவுன்ஸில் ஒன்றை மூன்று மாதங்களுக்கு முன்னரே நான் நியமித்திருந்தேன்." - என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஆனால், அத்தகைய கவுன்ஸில் ஒன்று ஐ.தே.க. தரப்பினரின் - அமைச்சர்களின் - கட்டுப்பாட்டில் இயங்கும் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்குள் இதுவரை தலைநீட்டியதாகத் தகவல் ஏதுமில்லை.

இப்போதும் கூட, நாட்டின் பொருளாதார விடயங்களை ஐ.தே.கவினர் நிர்வகிக்கின்ற விவகாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, அவற்றை ஜனாதிபதி தாம் ஏற்க வேண்டுமானால், ஐ.தே. கவினரின் வசமுள்ள பல அமைச்சுகளை அவர் பறித்தெடுத்துத் தமக்குக் கீழ் கொண்டுவரவேண்டும். அல்லது தமக்குச் சார்பான அமைச்சர்களிடம் - தமது கட்சியினரிடம் - அவற்றை ஒப்படைக்க வேண்டும்.

குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வசம் உள்ள தேசியக் கொள்கைகள், பொருளாதார விவகாரம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு போன்றவற்றில் தொடங்கி, அமைச்சர் மங்கள சமரவீரவிடம் இருக்கும் நிதி அமைச்சு வரை எல்லாவற்றையும் ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தால் மட்டுமே, நாட்டின் பொருளாதார நிர்வாகம் தனது நேரடிக் கண்காணிப்பில் இருக்கின்றது, ஐ.தே.கவினர் வசம் இல்லை என்று அவர் கூற முடியும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையைக் கடந்த நாற்பது ஆண்டுகளாகப் பேணி வரும் இலங்கையில் ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், பிரதமர் வேறு ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும் இருக்கும் சந்தர்ப்பம் இது இரண்டாவதாகும்.

ஏற்கனவே சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த போது 2001 டிசெம்பர் முதல் 2004 ஏப்ரல் வரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு ஆட்சியில் நீடித்தது.

இப்போது போல, 'நல்லாட்சி அரசு' என்ற பெயரில் ஜனாதிபதியும், பிரதமரும் வெவ்வேறு கட்சியினராக இருந்தபோதிலும் சேர்ந்து - உடன்பட்டு - இணங்கி - அப்போது அரசை அமைக்கவில்லை.

அதனால் முரண்பட்ட தரப்புகள் இடையேயான பிய்ச்சல் பிடுங்கல் நீடித்தது. கடைசியாக ரணிலின் அரசில் இருந்த அமைச்சுகளைத் தன் விருப்பப்படி பறித்து, தனது கட்சியினரை அந்த அமைச்சுகளுக்கு நியமித்த சந்திரிகா, இறுதியில் ரணிலின் அரசை முற்கூட்டியே கலைத்து, வீட்டுக்கு அனுப்பி, புதிய தேர்தலை நடத்தி, தனது புதிய அரசையும் அமைத்துக் கொண்டார்.

ஆனால், இன்று பிரதமர் ரணிலுடன் சேர்ந்து நல்லாட்சி அரசு அமைத்திருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், ஜனாதிபதி சந்திரிகா நடந்துகொண்டமை போல நடக்கமுடியாது.

ஏனெனில், 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் ஜனாதிபதியின் அதிகாரம் வெட்டிக் குறைக்கப்பட்டு விட்டது.

பிரதமரின் ஆலோசனை, இணக்கம், உடன்பாடின்றி அமைச்சுக்களையும், அமைச்சர்களையும் தம்பாட்டில் ஜனாதிபதியால் மாற்ற முடியாது. ஒரு நாடாளுமன்றத்தை அதன் பதவிக் காலத்தில் நான்கரை ஆண்டுகள் முடிவதற்கு முன்னர் ஜனாதிபதியால் கலைக்கவும் முடியாது - இந்த இரண்டு ஏற்பாடுகளையும் 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் உறுதி செய்திருக்கின்றது.

இத்தகைய சூழலில், நாட்டின் பொருளாதார நிர்வாகத்தை ஐ.தே.கவினரிடமிருந்து பறிப்பது என்பது ஜனாதிபதியால் சுலபமாகச் செய்யக்கூடிய அரசியல் நடவடிக்கை அல்ல என்றே எமக்குத் தோன்றுகின்றது. அதை அவர் செயற்படுத்த முனைவாரெனில், பெரும் அரசியல் நெருக்கடி - இக்கட்டு - சிக்கல் - நாட்டில் உருவாகும் என்பது நிச்சயம்.

# கதிர்காமத்தில் துப்பாக்கிச் சூடு; விசாரணைக்காக விசேட குழு!

கொழும்பு, ஜன. 22

கதிர்காமத்தில், பொலிஸாரின் ஆணையை மீறிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய அந்தப் பகுதிக்கு விசேட குழுவொன்றை அனுப்புமாறு பொலிஸ்மா அதிபர் பணித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு கதிர்காமத்தில், பொலிஸாரின் சமிக்ஞையையும் மீறி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றார் எனக் கூறிப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்தார்.

இதனால், கோபமடைந்த அந்தப் பகுதி மக்கள் பொலிஸ் நிலையம் மீது கல்வீசித் தாக்குதல் நடத்தினர். அதைத் தடுப்பதற்காகப் பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளைப் பிரயோகித்தனர். இதையடுத்து அங்கு பரபரப்புத் தோன்றியது.

இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் கருத்துத் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நபர் நேற்றுமுன்தினம் இரவு சுமார் பத்து மணியளவில் கடையில் பொருள்களை வாங்கிக்கொண்டு வீடு திரும்பியுள்ளார். அவர் பொலிஸாருக்கு மிக நெருக்கத்தில் வரும் போது மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு பொலிஸார் சமிக்ஞை செய்துள்ளனர்.

மிதமான வேகத்தில் வந்த அந்த நபர், உடனடியாக மோட்டார் சைக்கிளை நிறுத்த முடியாதமையால், சில அடி தூரம் சென்று நிறுத்தியிருக்கிறார்.

அதற்குள், ஊர்காவல் படை வீரருடன் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர், அந்த நபர் தப்பிச் செல்கின்றார் என நினைத்து அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளார்.

இதில் நிலைகுலைந்து விழுந்த நபரைத் தூக்க முயன்ற இளைஞரையும் பொலிஸ் உத்தியோகத்தர் தாக்கியுள்ளார்.

பின்னர் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து, சுடப்பட்ட நபர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு சிகிச்சைகள் பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இது குறித்துக் கேள்விப்பட்ட அந்தப் பகுதி மக்கள் மற்றும் கொல்லப்பட்ட 44 வயது நபரின் உறவினர்கள் பொலிஸ் நிலையத்தின் முன் கூடி கல் வீசித் தாக்குதல் நடத்தினர். இதைத் தடுப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரயோகித்தனர்.

பின்னர், இரு தரப்பினரிடையேயும் பேச்சு நடத்தி நிலைமை சுமுகமாக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், மோட்டார் சைக்கிளை நிறுத்திய பின்னரே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர் கைதுசெய்யப்பட்டு, எதிர்வரும் 30 திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# வவுனியா திருமண நிகழ்வில் வழங்கிய குளிர்பானத்தில் கழிவுகள்

வவுனியாவில் குளிர்பானம் ஒன்றிற்குள் இருந்து கழிவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நேற்று இடம்பெற்ற திருமண நிகழ்வு ஒன்றில் வந்திருந்தவர்களுக்கு குளிர்பானம் வழங்கும்போது இளைஞர்கள் இதை அவதானித்துள்ளார்கள்.

அடைக்கப்பட்ட குளிர்பானப் போத்தல் ஒன்றிற்குள்ளேயே கழிவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



ஒரு பிரபல நிறுவனத்திலிருந்து அடைக்கப்பட்டு குளிர்பானம் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கும்போது கழிவுப் பொருள்கள் எவ்வாறு உட்செல்ல முடியும்? குளிர்பானம் அடைக்கும் போத்தல் சுத்தப்படுத்தப்படவில்லை எனச் சந்தேகம் எழுகின்றது. இவ்வாறானவர்களுக்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தினூடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அங்கு வந்திருந்தவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# பல்கலைக்கழக அனுமதி; கருத்தரங்கு வவுனியாவில்!

வவுனியா, ஜன. 22

பல்கலைக்கழக அனுமதிக்கான தமிழ் மொழிமூல வழிகாட்டல் கருத்தரங்கு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா வளாக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் பல்கலைக்கழகங்களைத் தெரிவுசெய்தல், பாடங்களை இனங்காணல் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.





வவுனியா வளாக முதல்வர் மங்களேஸ்வரன், சிரேஷ்ட உதவிப்பதிவாளர் ஆர்.ஜெயக்குமார், வவுனியா வளாக விரிவுரையாளர் ரி.கார்த்தீஸ்வரன், இரசாயனவியல் ஆசிரியர் ஏ.எஸ்.பரந்தாமன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்கினர்.

விண்ணப்பிக்கும் முறையே அவர்களது பல்கலைக்கழக அனுமதியைத் தீர்மானிக்கின்றது எனவும், சில மாணவர்கள் தவறாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதால் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமல் போன சந்தர்ப்பங்களும் உள்ளன என இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

(க)

# வெங்காயச் செய்கையில் அச்சுவேலி விவசாயிகள்

அச்சுவேலிப் பிரதேசத்தில் பெரும்போக வெங்காயச் செய்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக தம்பாலை, கதிரிப்பாய், வளலாய் பத்தைமேனி போன்ற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் வெங்காயம் பயிரிடுவதில் கவனத்தைச் செலுத்தியுள்ளனர். நடப்பட்ட வெங்காயப் பயிர்களுக்கு கிருமிநாசினி மற்றும் சேதனப் பசளைகளை அவர்கள் பயன்படுத்தி வருகின்றமையுடன், மிளகாய் நாற்றுக்களையும் வெங்காயப் பயிர்களுக்குள் நட்டும் வருகின்றனர். அதேசமயம் தற்போது வெங்காயத்தின் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது எனவும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

## நாளை

23.01.2018
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: ரேவதி பி.இ. 5.13 வரை
திதி: ஷஷ்டி பி.ப. 1.14 வரை
சுபநேரம்: 11.06 – 12.36 வரை
இராகுகாலம்: 3.36 – 5.06 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழீழத்தை கைவிடும் ஆணை

# சுமந்திரனுக்கோ அல்லது வேறு எவருக்குமோ வழங்கப்படவேயில்லை

## நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் காட்டம்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின்பிரதமர் வி.உருத்திரகுமாரன், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுக்கு பகிரங்க சவால் ஒன்றை விடுத்துள்ளார்.

பெரும்பான்மைமக்களைத்திருப்திப்படுத்தும் நோக்கில் தமிழீழக் கோரிக்கையைத் தமிழ் மக்கள் கைவிட்டுவிட்டார்கள்எனஎம்.ஏ.சுமந்திரனை மையப்படுத்தி செய்திகள் வெளிவந்திருந்தன.

இந்தநிலையில், கனடாவில்இடம்பெற்று வருகின்ற தமிழீழ அரசாங்கத்தின் நேரடி அரசவை அமர்வில் இவ்விவகாரம் தொடர்பில் பகிரங்க சவால் ஒன்றை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் விடுத்திருந்தார்.

இந்த அமர்வில் நாடுகடந்த தமிழீழஅரசாங்கத்தின்பிரதமர்வி.உருத்திரகுமாரன் கூறியவை வருமாறு–

சுமந்திரன் அவர்களே! தமிழீழ இலட்சியத்தைக் கைவிடும் ஆணை உங்களுக்கோ அல்லது வேறு எந்த தமிழ்த்தலைவர்களுக்கோகிடையாது.

முடிந்தால் நீங்கள் நல்லுறவு கொண்டிருக்கும் இலங்கை அரசுடன் பேசி, 6ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கிவிட்டு மக்கள்முன்னால்வந்து ஆணை கேளுங்கள்.

நீங்கள் தமிழீழத் தனியரசுக்கு எதிரான பக்கம் நில்லுங்கள். நாம் தமிழீழ அரசுக்குஆதரவானபக்கம்நிற்கிறோம். மக்கள் தீர்ப்பு வழங்கட்டும்.

அப்போது மக்கள் உங்களுக்குச் சார்பான தீர்ப்பு வழங்குவார்களானால் அதன் பிறகு தமிழீழ தனியரசு நிலைப்பாட்டைத்தமிழர்கள்கைவிட்டனர்எனப் பேசுங்கள். அதுவரை சற்று அமைதியாக இருங் கள்

மேலும், நான் எனது புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டவாறு தமிழ் மக்களின் அரசியல் தலைவிதி தமிழ் மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். அதற்கேற்றவகையில்எமது செயற்பாடுகளை நாம் ஒழுங்கமைக்க வேண்டும்.

உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களை ஒருவலுமையமாகத்திரட்டி அந்த வலு மையத்தின் பலத்தில் தங்கி நின்று உலகநாடுகளுடன்எமதுநலன்சார்ந்து உரையாடும் பலத்தை நாம் பெற வேண்டும்.

அரசற்றஒருதேசம்என்றவகையில் தமிழ் மக்கள் தாமாக அணி திரண்டு அரசுகளை எதிர்கொண்டு செயற்படக் கூடியதொரு வலுவைப் பெறும் வகையில் மக்கள் அணி திரள வேண்டும்.

இந்தத் தொலைநோக்கை அடிப்படையாகக் கொண்டே நாம் எமது செயற்பாடுகளைக் கட்டியமைக்க வேண்டியவர்களாகஉள்ளோம்.கையில்வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்? என்றுநம்மூத்தோர்கள்காட்டிய வழிமுறையொன்று நம்முன்னே உண்டு. வெண்ணெய்யை உருக்கி நெய்யைப் பெறும் போது முயற்சியின் ஊடாக ஓர் உரு மாற்றம் நிகழ்கிறது.

இதேபோல் நாம் எமது முயற்சியின் ஊடாக உலகத் தமிழ் மக்கள் என்ற மக்கள்பலத்தை அனைத்துலகில் அரசியற் பொருளாதார சக்தியாக உருமாற்றம் செய்ய வேண்டும்.

நாம் எடுத்துக் கொண்ட உதாரணத்தில் உருமாற்றம் இலகுவானது. நாம் இப்போது பேசும் அரசியல் உருமாற்றம் கடினமானது. மிகுந்த முயற்சியை வேண்டி நிற்பது. இருந்த போதும் நாம் அதனைச் செய்தாக வேண்டும்.

எந்தவொரு மக்கள்கூட்டமும்தனது அரசியற் பெருவிருப்பை சுதந்திரமாக வெளிப்படுத்தவும், இப் பெருவிருப்புகளை அடைந்து கொள்வதற்காக செயற்படுவதும் அடிப்படை மனித சுதந்திரத்தின்பாற்பட்டது.

இந்த மனித சுதந்திரத்துக்கு தமிழீழ மக்கள் உரித்துடையவர்கள். ஆனால், இலங்கையின் சிங்கள, பௌத்த இனவாத அரசுதனது அரசியற் சட்டங்கள் ஊடாகவும் இராணுவ ஆக்கிரமிப்பின் ஊடாகவும் இந்த அடிப்படை மனித சுதந்திரத்தை ஈழத் தமிழ் மக்களிடம் இருந்து பறித்தெடுத்திருக்கிறது.

இலங்கைஅரசமைப்பின்ஆறாவது திருத்தச் சட்டம் மக்களின் கருத்துரிமைக்கு எதிரானது.

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு சுதந்திரமும், இறைமையும்உடைய சுதந்திர தமிழீழ அரசுதான் தீர்வாக அமையும் என்று சொல்வதற்கும், செயற்படுவதற்கும் உள்ள உரிமையை 6 ஆவது திருத்தச் சட்டம் மறுதலிக்கிறது.

நாம் அதனை எதிர்கிறோம். எமது மக்களின் தீர்மானிக்கும் உரிமையை இலங்கை அரசோ அல்லது சிங்கள தேசமோ தீர்மானிக்க முடியாது. இதனால் அரசமைப்பின் இந்தப் பிரிவை நீக்குமாறு நாம் குரல் கொடுக்கிறோம்.

6 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் நடைபெற்ற தேர்தல்கள் எவையும் தமிழீழ தனியரசு குறித்த மக்கள் விருப்பை வெளிப்படுத்தும் ஒன்றாகக் கொள்ள முடியாது.

இதனை இன்னொரு வகையில் கூறுவதாயின், 6ஆவதுதிருத்தச்சட்டம் அமுலில் இருக்கும்வரை தமிழீழ தனியரசு அமைக்கும் விருப்பை மக்கள் கைவிட்டு விட்டார்கள் என்று எவரும் கூறமுடியாது.

இவ்வாறு கூறும் உரித்தோ, ஆணையோ தற்போதைய தமிழ்த் தலைவர்கள் எவருக்கும் கிடையாது.

1977ஆம் ஆண்டில் தமிழீழம் குறித்த மக்கள் வாக்கெடுப்பு எனக்கூறி நடத்தப்பட்டதேர்தலில்மக்கள்வழங்கிய ஆணையும், போர்க்களத்தில் 50,000 இற்கும் மேற்பட்ட போராளிகள் குருதி சிந்தி வழங்கிய உயிர்க்கொடையும் தமிழீழம் என்ற இலட்சியத்துக்கு ஆதாரமாக இருக்கின்றன.

தமிழ் மக்களின் அரசியற் தலைவிதியைத் தமிழ் மக்களே தீர்மானிக்கும் வகையில் தமிழீழ தனியரசு உள்ளடங் கலான அரசியற்தீர்வு குறித்து தாயகத்திலும், ஈழத் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக் கையை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முனைப்பாக முன்னெடுக்கவுள்ளது.

அண்மையில்வந்தபத்திரிகைசெய்தியொன்றில் பெரும்பான்மை சமூகத்தைத் திருப்திபடுத்துவதற்காகத் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தச் செய்தி உண்மையாக இருக்கும் பட்சத்தில் நாம் சுமந்திரனுக்கு ஒரு செய்தியைச் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

சுமந்திரன் அவர்களே! தமிழீழ இலட் சியத்தைக் கைவிடும் ஆணை உங்களுக்கோ அல்லது வேறு எந்தத் தமிழ் தலைவர்களுக்கோ கிடையாது.

எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் உரிமைக்காக நாம் முனைப்பாகக்குரல்கொடுக்கவேண்டியவர்களாக உள்ளோம்.

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கான எந்தவோர் அரசியற்தீர்வும் தமிழ் மக்களால் தீர்மானிக்கப்படுதல் முக்கியமானது.

இது தமிழீழ மக்கள் ஒரு தேசம் என்ற நிலைப்பாட்டின்பாற்பட்ட அடிப்படையான உரிமையாகும். தமிழீழ மக்களது தேசிய இனப்பிரச்சினைக்கான எத்தகைய தீர்வும் இனப்படுகொலையிலிருந்து தமிழர் தேசத்தைப் பாதுகாக்கக்கூடியவகையில், தமிழ் மக்களுக்கான ஈடுசெய்நீதியின் அடிப்படையில் எட்டப்பட வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதாகும்.

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு தமிழீழ மக்களுக்கு ஈடுசெய்நீதியின் அடிப்படையிலான அரசியற்தீர்வு அவசியம் என்பதை வலியுறுத்துகிறது.

தமிழ் மக்களின் அரசியற் தலைவிதியைத் தமிழ் மக்களே தீர்மானிக்கும் வகையில் தமிழீழ தனியரசு உள்ளடங்கலான அரசியற்தீர்வு குறித்து தாயகத்திலும், ஈழத் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும்நாடுகளிலும்பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நாடுகடந்ததமிழீழ அரசாங்கம் முனைப்பாக முன்னெடுக்கவுள்ளது.

இதற்காக (தமிழர் தலைவிதி தமிழர் கையில் – பொதுவாக்கெடுப்புக்கான மக்கள் இயக்கம்) எனும் மக்கள் அமைப்பை உருவாக்கியுள்ளோம். இம் மக்கள் அமைப்பின் செயற்பாடுகளை வலுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் குறித்தும் நாம் இந்த அமர்வில் விவாதிக்கவுள்ளோம்.

மேலும், இந்த அமர்வு தமிழர் தாயகப்பிரதேசத்தில் பெப்ரவரி 10ஆம் திகதி நடைபெறவுள்ளஉள்ளூராட்சித்தேர்தல் தொடர்பாகவும் இலங்கையின் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியின் பாற்பட்டவெளிவந்தஇடைக் கால அறிக்கை குறித்தும் விவாதிக்கவுள்ளது. தமிழ் மக்களின்உரிமைப்போராட்டத்தில் இவை ஏற்படுத்தக் கூடிய தாக்கம் என்னவாக இருக்கும் என்பதே எமது உரையாடலின்அடிப்படைக் கருப்பொருளாக இருக்கும்.



இவற்றைப் பற்றிப் பேசாதுபுறக்கணிப்பதனை விட, இவற்றைப் பேசி, விவாதித்து இவற்றைக் கடந்து போகும் வகையிலானஓர்அரசியற்திட்டத்தை நாம்வகுத்துக்கொள்ளுதல் அவசியமானதாகும்.

எமது அரசியற்தலைவிதியை நாமே தீர்மானிக்கும் ஒரு பொறிமுறையை நாம்உருவாக்கியேதீரவேண்டும்என்றஉறுதிப்பாட்டோடு நாம் இம் அமர்வில் செயற்படுவோமாக என குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# பிணைமுறி மோசடி தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சம்பந்தன் ஆதரவு கொடுப்பதை ஏற்க முடியாது!

## கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைரெட்ணம் குற்றச்சாட்டு

தமிழ்படுகொலைகளை திட்டமிட்டு மேற்கொண்ட ஐக்கியதேசியக்கட்சியினருடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூட்டு சேர்ந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களம் இறங்கியுள்ளது என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெட்ணம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும், இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் ஆதரவு கொடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இதன்போது அவர் தெரிவித்துள்ளார்.





மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச சபைக்காக உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் மகளிர் வேட்பாளரான நாகராசா பத்மராகினியின் பிரசார அலுவலகம் நேற்று முன்தினம் ஆயித்தியமலை பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த திறப்பு விழாவில், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெட்ணம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அலுவலகத்தினைத் திறந்து வைத்ததுடன், அரசியல் கருத்துக்களையும் வெளியிட்டார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ் மக்கள் தேசியக் கட்சிகளுக்கு அளிக்கின்ற ஒவ்வொரு வாக்குகளும் முஸ்லிம் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கான வாக்குகள் மட்டுமன்றி வவுணதீவு மக்கள் அதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

# தமிழகத்து மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்கு

கொழும்பு, ஜன. 22

கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தி அட்டூழியம் புரிந்துள்ளது என தமிழக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் குறிப்பிடுகையில்–

தாம் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இரண்டு ரோந்து கப்பலில் இலங்கைக் கடற்படையினர் அங்கு வந்தனர் எனவும் அவர்கள் தம்மை அச்சுறுத்தியமையோடு மீன்பிடிக்க விடாமல் விரட்டியடித்தனர் எனவும் குற்றம் சாட்டினர்.

மேலும், தமது மீன்பிடி வலைகளை அறுத்தெறிந்து அட்டூழியம் புரிந்தனர் எனக் குறிப்பிட்ட அவர்கள், இந்திய கடற்பகுதிக்குள் இலங்கை கடற்படை அத்துமீறிய ஒரு சம்பவமாகவே தாம் இதனைக் கருதுகின்றோம் எனக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



இதேவேளை, கச்சதீவு கடற்பகுதி இந்திய இலங்கை எல்லைப்பகுதியில் காணப்படுவதனால் இந்தப் பகுதியில் மீன் பிடிக்க வரும் தமிழ் நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் கைதுசெய்யப்படும் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. என இந்தியச் செய்தி வட்டாரங்கள் குறிப்பிட்டன.

# மஹிந்த குழுவிலுள்ளவர்கள் மீண்டுவர கால அவகாசம்!

## சந்திரிகா தெரிவிப்பு

மஹிந்த குழுவிலுள்ள நல்லவர்களுக்கு மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்வதற்கு எதிர்வரும் 7 ஆம் திகதி வரையில் கட்சியின் கதவு திறந்திருக்கும் என முன்னாள் ஜனாதிபதியும் அக்கட்சியின் போசகருமான சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

வத்தளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலுள்ளவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து சென்றவர்கள். அவ்வாறு சென்றவர்களுள் நல்லவர்களும் உள்ளனர். இவர்கள் மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ள அவகாசம் வழங்குகின்றோம் எனவும் அவர் கூறினார்.










# யாழ். வர்த்தகக் கண்காட்சிக்கு பிரம்மாண்டமான ஏற்பாடுகள்!

யாழ்ப்பாணம் , ஜன. 22

யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2018 எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த வருடம் ஒன்பதாவது தடவையாகவும் ஏற்பாடாகியுள்ள இந்த கண்காட்சி உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்கள் சந்திக்கும் களமாக அமைந்துள்ளதால் வடக்கிற்கான நுழைவாயில் என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது.

யாழ். வர்த்தக கைத்தொழில் சம்மேளனம், இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு சேவைகள் தனியார் நிறுவனம், யாழ் மாநகர சபை போன்றவற்றின் துணையுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சியில், 350 காட்சிக் கூடங்கள் அமைக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலுள்ள அமெரிக்க மையம் மூடப்பட்டது!

கொழும்பு, ஜன. 22

கொழும்பில் உள்ள அமெரிக்க மையம் (American Center) மறு அறிவித்தல் வரும் வரையில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அரசின் குறுங்கால வரவு- செலவுத்திட்டத்துக்கு, அமெரிக்க செனெட் உறுப்பினர்கள் அங்கீகாரம் அளிக்கமறுத்துள்ளதால், அமெரிக்காவின் பெரும்பாலான அரச பணியகங்கள் மூடப்பட்டுள்ளன.

பென்டகன் மற்றும் ஏனைய சில சமஷ்டி முகவர் அமைப்புகளுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கு, செனெட்டின், குடியரசு மற்றும் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் அங்கீகாரம் அளிக்க மறுத்து வருகின்றனர்.

இதனால், அமெரிக்காவின் பெரும்பாலான அரசுப் பணியகங்கள் செயலிழக்கவுள்ளன.

குறிப்பாக, நுழைவிசைவு வழங்கும் பணிகளில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.



இதுகுறித்து கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், திட்டமிட்டபடி, கடவுச்சீட்டு மற்றும் நுழைவிசைவு சேவைகள் தொடரும் என்றும், அமெரிக்க மையம் மறு அறிவித்தல் வரும்வரை மூடப்பட்டிருக்கும் என்றும் கூறியுள்ளது.

# காட்டு யானைகள் தாக்கியதில் இரு பொலிஸார் கடும் காயம்!

கொழும்பு, ஜன. 22

கஞ்சா பயிரிடப்பட்டிருந்த பகுதியைச் சுற்றி வளைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை காட்டு யானைகள் தாக்கியதில் இருவர் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கஞ்சா பயிரிடப்பட்டிருக்கிறது எனக் கிடைத்த தகவலின் பேரில், லுனுகம்வெஹர பகுதியில் ஆய்வு நடத்த பொலிஸார் சென்றிருந்தனர்.

இந்த கஞ்சா தோட்டத்தை ஆய்வு செய்து கொண்டிருக்கும்போது, திடீரென அங்கு காட்டு யானைகள் நுழைந்தன.

இதனால், அதிர்ச்சியுற்ற பொலிஸார், தம் வசமிருந்த ஆயுதங்களைக்கைவிட்டுவிட்டு உயிர்தப்ப முயன்றனர்.

எனினும், அதற்குள் காட்டு யானைகள் தாக்கியதில் இருவர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை விமான ஓடுபாதை சிலமணிநேரம் மூடப்பட்டது!

இலங்கை வான்பரப்பின் விமான ஓடுபாதை மூடப்பட்டிருந்தமை காரணமாக சிங்கப்பூர் மற்றும் கோலாலம்பூர் நோக்கிப் பயணித்த எத்தியோப்பிய விமானம் ஒன்று சென்னைக்கு திருப்பி அனுப்பப்பட்டது எனதஹிந்துசெய்தி வெளியிட்டுள்ளது.

எத்தியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவிலிருந்து கடந்த 18ஆம் திகதி சிங்கப்பூர் மற்றும் கோலாலம்பூர் நோக்கிப் பயணித்த ~Ä368 ரக விமானமே சென்னைக்கு திருப்பி அனு பப்பட்டுள்ளது.

இந்தியாமேற்கொண்ட ஒடிசாவில் அக்னி-5 ஏவுகணை சோதனையை காரணமாக இலங்கையின் விமான ஓடுபாதை வான்பரப்பு மூடப் பட்டிருந்தால், குறித்த விமானம்சென்னைக்குதிருப்பி அனுப்பப்பட்டது என அந்தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை, இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட அக்னி-5 ஏவுகணை பரிசோதனை காரணமாக இலங்கை வான்பரப்பின் விமான ஓடுபாதை குறித்த காலப்பகுதியில் சில மணிநேரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாக கட்டுநாயக்க விமான நிலைய செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் இதனால், இலங்கைக்கு பயணித்த விமானப் பயணங்களில் எதுவும் மாற்றம் ஏற்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தாது கோபுரத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்பு!

கொழும்பு, ஜன. 22

ரத்மலானை பொருபனை எஹொடஹேன ஸ்ரீ விசுத்தாராம விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தாதுகோபுரத்தை திறந்து வைக்கும் புண்ணிய நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பங்களிப்புடன் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்றது.



விகாரைக்குச் சென்ற ஜனா திபதி, விகாராதிபதி சங்கைக் குரிய பரதன்வல கல்யான தஜதேரரை சந்தித்தமையுடன், சமயக் கிரியைகளில் கலந்துகொண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தாதுகோபுரத்தின் நினைவு பலகையை திரை நீக்கம் செய்து வைத்த ஜனாதிபதி , மலர் பூஜை செய்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.

மத்திய மாகாண தலைமை சங்க நாயக்க தேரர் சங்கைக் குரிய கம்பொல சுகுன தஜநாயக்க தேரர் இந்த நிகழ்வில் பிரதான அனுசாசன உரையை நிகழ்த்தினார்.

இந்த தாது கோபுரத்தை நிர்மாணித்த ஆர்.எம். காமினிக்கு ஜனாதிபதி நினைவுப் பரிசொன்றை வழங்கினார்.

பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரத்ன, மேல் மாகாண முதலமைச்சர் இசுற தேவப்பிரிய, முன்னாள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட

# மொரகஹகந்த நீர்த்தேக்கம் நிர்மாணம்; விவசாய நடவடிக்கைகளில் புதிய எழுச்சி!

கொழும்பு, ஜன. 22

ஐம்பெரும் நீர்த்தேக்கங்களில் முக்கியமானதாகக் கருதப்படும், மொரகஹகந்த நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டதையடுத்து, தமது விவசாய நடவடிக்கைகளில் புதியதோர் எழுச்சி ஏற்பட்டிருக்கிறது என பிரதேச விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 08 ஆம் திகதி ஜனாதிபதிமைத் திரிபால சிறிசேனவால், மொரகஹகந்த நீர்த்தேக்கம் திறந்து வைக்கப்பட்டது.



அதன் நீர் பெரிய கால்வாயினூடாக விவசாய நிலங்களுக்கு கிடைத்து வருகின்றது. எலஹர, பக்கமூன பிரதேசத்தை அண்மித்த விவசாய சமூகத்தினர் தற்போது தமது விவசாய நடவடிக்கைகளுக்கு மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் நீரைப் பயன்படுத்தி வருவதுடன், முன்னர் ஒரு போகம் விட்டு ஒரு போகம் விவசாயம் செய்து வந்த அவர்கள் இனி வரும் காலங்களில் இரண்டு போகங்களிலும் பயிர்ச்செய்கையில் ஈடுபட எதிர்பார்த் திருக்கின்றனர் தெரிவிக்கின்றனர்.

மகாவலி பெருந்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஐம்பெரும் நீர்த்தேக்கங்களில் மொரகஹகந்த களு கங்கை நீர்தேக்கத் திட்டம் இலங்கை விவசாயத்துறையின் முக்கிய பிரதேசமாகவுள்ள உலர் வலயத்திற்கு பெரும் பொக்கிசமாகக் கிடைக்கப் பெற்றுள்ளது.

மகாவலி நீர்த்தேக்கங்களில் விவசாய ரீதியாக முன்னுரிமையளிக்கப்பட்டுள்ள பெரும் நீர் கொள்ளளவுடைய பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமாகவும் மொரகஹகந்த களுகங்கை திட்டம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குருநாகல் வர்த்தகர் கட்டுநாயக்கவில் கைது!

கொழும்பு, ஜன. 22

வெளிநாட்டு சிகரட்டுகளைசட்டவிரோதமாக இலங்கைக்குள் கடத்தி வரமுயன்ற இலங்கையர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந்த நபர் குருநாகலையைச் சேர்ந்த வர்த்தகர் என்று தெரியவந்துள்ளது.

அவர் வசமிருந்த 23 ஆயிரத்து 889 சிகரெட்டுகளை சுங்கத் துறையினர் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட சிகரெட்டுகளின் பெறுமதி சுமார் பன்னிரண்டு லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட வர்த்தகர், நியமிக்கப்பட்ட 2 லட்ச ரூபா பிணைத் தொகையைச் செலுத்தியபின் பிணை விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒகிட் மலர் வளர்ப்பு வேலைத்திட்டம்!

அம்பாந்தோட்டை, ஜன.22

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஒகிட் மலர் வளர்ப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள் ளது.

சூரியவெவ, அம்பலந்தொட்டை, அகுனகொலபெலஸ்ஸ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட 250 குடும்பங்கள் இந்த மலர் வளர்ப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

மிரிஜ்ஜவெல உலர் வலய தாவரவியல் பூங்காவில் இது தொடர்பான பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொகவந்தலாவை 5 வட்டாரங்களையும் தமிழ் முற்போக்குக் கூட்டணி கைப்பற்றும்

கொழும்பு, ஜன. 22

பொகவந்தலாவை பிரதேசத்தில் கடந்த இரண்டு வருட காலத்துக்குள் நல்லாட்சி அரசால் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையால் எதிர் வரும் நோர்வூட் பிரதேச சபைத் தேர்தலில் பொகவந்தலாவை பிரதேசத்திலுள்ள 5 வட்டாரங்களையும் தமிழ் முற்போக்குக் கூட்டணி கைப்பற்றுவது உறுதி என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

பொகவந்தலாவை பிரதேசத்திலுள்ள பொகவந்தலாவை, பொகவான, லொயினோன், கேர்க்கஸ்வால்ட் கீழ், கேர்க்கஸ்வோல்ட் மேல் ஆகிய வட்டாராங்களில் போட்டியிடுகின்ற தமிழ் முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து இடம் பெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொகவந்தலாவை பிரதேசத்தில் நல்லாட்சி அரசுக்கு முன்பு குறிப்பிட்டு சொல்லக்கூடிய வகையில் எத்தகைய அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை.

தொடர்ந்து இந்தப்பிரதேசம் பின்தங்கிய பிரதேசமாகவே காணப்படுகின்றது. எனினும், நல்லாட்சி அரசால் அமைச்சர் திகாம்பரத்தின் முயற்சியால் கொட்டியாக்கலை, செல்வகந்தை கெம்பியன் போன்ற தோட்டங்களில் தனி வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தோட்டப்பகுதிகளில் மைதானங்கள், பாதைகள் செப்பனிடுதல், குடிதண்ணீர் விநியோகத் திட்டம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

பொகவந்தலாவை ஹோலி ரோசரி தமிழ் மகா வித்தியாலயத்துக்கு சகல வசதிகளும் கொண்ட முழுமையான பாடசாலையாக தரமுயர்த்தும் வகையில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் கோடிக்கணக்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்தத் தேர்தலைத் தொடர்ந்து மேலும் பல அபிவிருத்தித்திட்டங்களை பொகவந்தலாவை பிரதேசத்தில் முன்னெடுக்கவுள்ளோம். நோர்வூட் - பொகவந்தலாவை பிரதான பாதை, கெம்பியன் - லொயினோன் பாதை என்பனவற்றைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

இந்த நிலையில், நோர்வூட் பிரதேச சபையின் பொகவந்தலாவை பிரதேசத்தில் உள்ள 5 வட்டாரங்களையும் தமிழ் முற்போக்குக் கூட்டணி கைப்பற்றும் வகையில் வினைத்திறனுள்ள வேட்பாளர்களை நாம் களமிறக்கி உள்ளோம். ஆகவே, இவர்களின் வெற்றி உறுதி செய்யப்படுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம், கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றிய இந்தக் கூட்டங்களில் நோர்வூட் பிரதேச சபையின் பொகவந்தலாவை பிரதேச வேட்பாளர்களான பா.சிவநேசன், பி.கல்யாணகுமார், உதயகுமார், கமலதாசன், லோகநாதன், இருதயமேரி, விதுஷான் லோரன்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(க)

## தினசரி ராசி பலன்

(22.01.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத் திங்கள் 9 ஆம் நாள் திங்கட்கிழமை பஞ்சமித்திதி மாலை 4.25 மணிவரை பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம்: பூரட்டாதி காலை 7.06 மணிவரை பின்னர் உத்தரட்டாதி. மரணயோகம் காலை 7.06 மணிவரை அதன்மேல் சித்தம் மாலை 4.25 மணி வரை. பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *காலை 8.00 மணிமுதல் 9.27 மணிவரை*

**சுபநேரம்** - *பகல் 12.36 மணிமுதல் 2.06 மணிவரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி** - *தை மாத வளர்பிறை பஞ்சமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *உத்தரட்டாதி.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** கவலையான நாள். பொருளாதாரம் நலிவடையும். எண்ணிய கருமங்கள் கைகூடாமற் போகும். உறவினர்களின் பகையும், நண்பருடன் மனமுறிவும் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் திருப்தி நிலவும்.

**ரிஷபம்** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். உத்தியோகத்தர்களுக்குப் பணியிடங்களில் மதிப்பு உயரும். வியாபாரிகள் ஆடம்பரப் பொருட்கள் விற்பனையில் ஆதாயம் பெறுவார்கள்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சமமாக இருக்கும். தொழிலில் எதிர்பார்த்த அளவு பலன் குறையும். கொடுக்கல், வாங்கலில் சிலருக்கு மனக்கசப்பைத் தரும்.

**கடகம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். பெண்களின் வாழ்க்கைத் தரம் மேலோங்கும். நினைத்த காரியம் கைகூடும். வீடு, வாகன யோகம் உண்டாகும். மாணவர்கள் தேர்வில் வெற்றி பெறுவர்.

**சிம்மம்** துயரமான நாள். எதிர்பார்த்த பணம் வரத்தாமதமாகும். குடும்பத்தில் நடக்கும் நிகழ்வுகளால் மன அமைதி கெடும். அவசர முடிவுகளை எடுப்பார்கள்.

**கன்னி** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் நல்லுறவு விருத்தியடையும். வெளிநண்பர்களின் மூலம் ஆதாயம் பெறுவார்கள்.கொடுக்கல் , வாங்கல் சிறப்பாக இருக்கும்.

**துலாம்** சுபீட்சமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் இனிய சூழ்நிலை நிலவும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்கள் சேரும். விட்டுப் பிரிந்த உறவுகள் மீண்டும் இணையும்.

**விருச்சிகம்** இனிமையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். இல்லத்தில் இனிமை கொலுவிருக்கும். குடும்பத்துடன் சிலர் ஆன்மீக சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்வார்கள்.

**தனுசு** சலனம் மிகுந்த நாள். மனக் கவலை, யோசனை அதிகரிக்கும். பணம் பற்றாக் குறையாக இருக்கும். செலவுகள் அதிகரிப்பால் கடன் நிலை உண்டாகும். வியாபாரம் மந்த நிலையில் இருக்கும்.

**மகரம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவு உண்டாகும். வியாபாரத்தில் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும்.

**கும்பம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். எடுத்த காரியம் வெற்றியும், தன்னம்பிக்கையும் செயல்களில் பெரும் நன்மையைத் தரும்.

**மீனம்** அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். தொழிலில் வியாபார விருத்தி உண்டாகும். வெளிநாட்டு உறவினரின் சந்திப்பு பயனுள்ளதாக அமையும். அரச வழியால் சிலருக்கு வீடு, காணி என்பன கிடைக்கும்.

**சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

## களபாவோடை நாகபூசணிக்கு இன்று கொடியேற்றம்



ஏழாலை, ஜன. 22

ஏழாலை தெற்கு, வசந்தபுரம் களபாவோடை அருள் மிகு வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தான மகோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும்.

உற்சவ நாள்களில் காலை 9.30 மணிக்கு சமயச் சொற்பொழிவும் முற்பகல் 11.30 மணிக்கு அன்னதானமும் நடைபெறும்.

விசேட உற்சவங்களான வேட்டைத் திருவிழா 28 ஆம் திகதி ஞாயிறு முற்பகல் 10 மணிக்கும் சப்பைரதத் திருவிழா 29 ஆம் திகதி திங்கள் முற்பகல் 10 மணிக்கும், தேர்த் திருவிழா 30 ஆம் திகதி செவ்வாய் முற்பகல் 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கும் இடம்பெறும் என்று தேவஸ்தானத்தினர் அறிவித்துள்ளனர். (இ)

## நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய் காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** - உருத்திரபுரம், ஜெயந்திநகர் ஆகிய இடங்களிலும் -

**வவுனியா பிரதேசத்தில்** - கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்பமருதங்குளம், பெரியகூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம், சாந்தசோலை கிராமம், கொக்கிளிய, அக்போபுர, மதவுவைத்தகுளம், தவசிக்குளம், குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம் ஆகிய இடங்களிலும் -

மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## யாழ்.வைத்தீஸ்வரா கால்கோள் விழா

யாழ்.வைத்தீஸ்வரக்கல்லூரியின் கால்கோள் விழாவும், சாரணர்களுக்கு சின்னம் சூட்டலும், பாடசாலை அபிவிருத்திச் சங்கப்பொதுக்கூட்டமும் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் திருமதி சு.அருளானந்தம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். கோட்டக் கல்வி அலுவலகப் பணிப்பாளர் எஸ்.தேவகுமாரன், சிறப்புவிருந்தினர்களாக பழைய மாணவர் சங்க கனடா கிளையின் பிரதித் தலைவர் சி.அகிலன், கனடா கிளையின் பொருளாளர் மா. பாலச்சந்திரன், யாழ். பழைய மாணவர் சங்கச் செயலாளர் மு. ஜெகதீசன் மற்றும் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர்.

கால்கோள் விழாவில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கல், உயர்தரத்தில் சிறப்புப் பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கான ஊக்குவிப்புப் பரிசுகள் வழங்கல், ஆசிரியர்கள் கௌரவித்தல் ஆகிய சிறப்பு நிகழ்வுகளைக் கனடா பழைய மாணவர் சங்கத்தினர் நடத்துகின்றமை குறிப்பிடக் கூடியதாகும். (இ-19)

## ஆக்கத்திறன் போட்டி; கொழும்பில் விருது வழங்கும் விழா

யாழ்ப்பாணம், ஜன.22

இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்துசமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற ஆக்கத்திறன் போட்டியில் வெற்றியடைந்தோருக்கான விருது வழங்கும் விழா எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த வைபவத்தின் தேசிய மட்டத்தில் தெரிவான முதல் மூன்று இடங்களைப் பெற்ற 22 மாவட்டங்களைச் சேர்ந்த 324 மாணவர்களுக்கான விருதுகளும் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (இ)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir
திங்கட்கிழமை 22.01.2018 09

**வழிமூலம்** - Global Times
**ஆங்கிலத்தில்** - Liu Zongyi
**மொழியாக்கம் - நித்தியபாரதி**



# கோகலேயின் வரவால் இந்தியா – சீனா உறவில் மாற்றம் வருமா?

சீனாவுக்கான இந்தியாவின் முன்னாள் தூதுவர் விஜய் கோகலே இந்தியாவின் புதிய வெளியுறவுச் செயலராக நியமிக்கப்படவுள்ளார் என இந்திய மத்திய அரசாங்கம் 2018 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அறிவித்துள்ளது. தற்போது இந்திய வெளியுறவுச் செயலராகப் பதவி வகிக்கும் எஸ்.ஜெய்சங்கரின் பதவிக்காலம் ஜனவரி 28இல் முடிவுறவுள்ள நிலை யிலேயே இந்திய அரசாங்கம் புதிய வெளிவிவகாரச் செயலராக விஜய் கோகலேயை நியமிக்கின்றமை தொடர்பாக அறிவித்துள்ளது.

வெளியுறவுச் செயலர் என்பது இந்தியாவின் உயர்மட்ட இராஜதந்திரியாவார். இந்தப் பதவி சீனாவின் வெளிவிவகார அமைச்சிலுள்ள துணை அமைச்சரின் பதவிக்கு ஒப்பானதாகும்.

இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் வழமையாக அரசியல் செல்வாக்கின் மூலமே நியமிக்கப்படுகிறார்கள். இந்திய வெளிவிவகாரச் செயலர், வெளிவிவகாரங்களில் மிக முக்கிய பங்காற்றுவதுடன் இவர் இந்தியப் பிரதமரின் மூத்த ஆலோசகராகச் செயற்படுகின்றமை மட்டுமன்றி, வெளிவிவகாரக் கோட்பாட்டை அமுல்படுத்துகின்ற பிரதான அதிகாரியாகவும் உள்ளார்.

இந்திய வெளிவிவகாரச் செயலர்களாகப் பணியாற்றிய ஆறு பேரில் நான்கு பேர் சீனாவிற்கான தூதுவர்களாகப் பணியாற்றியவர்களாவர். இவர்கள் சீன மொழியை சரளமாகப் பேசக்கூடியவர்கள்.

சீனா தொடர்பாக நன்கறிந்த வல்லுநரான கோகலே, இந்தியாவின் புதிய வெளிவிவகாரச் செயலராக நியமிக்கப்படுகின்றமை இந்தியாவுக்கும் சீனாவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவானது இந்திய மத்திய அரசாங்கத்தின் திட்டத்தில் மிக முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது என்பதையே சுட்டிக்காட்டுகிறது.

**அதிகூடிய அனுபவம்**

கோகலே இராஜதந்திர ரீதியாக அதிகூடிய அனுபவத்தைக் கொண்டுள்ளதன் காரணமாகவே இந்தியாவின் முக்கிய பதவியான வெளிவிவகாரச் செயலராக நியமிக்கப்படவுள்ளமைக்கான அடிப்படைக் காரணமாகும். இவர் ஹொங்கொங், ஹனோய், பீஜிங், நியூயோர்க் போன்ற முக்கிய நகரங்களில் பணியாற்றியுள்ளார்.

2010 ஜனவரி தொடக்கம் ஒக்ரோபர் 2013 வரை மலேசியாவிற்கான உயர் ஆணையாளராகவும், ஒக்ரோபர் 2013 தொடக்கம் ஜனவரி 2016 வரை ஜேர்மனிக்கான தூதுவராகவும் ஜனவரி 2016 தொடக்கம் ஒக்ரோபர் 2017 வரை சீனாவிற்கான தூதுவராகவும் கடமையாற்றியுள்ளார்.

அத்துடன் இவர் வெளிவிவகார அமைச்சின் கிழக்காசியப் பிரிவின் தலைவராகவும் கடமையாற்றினார். அத்துடன், ஜப்பான், மொங்கோலியா, தென் கொரியா போன்ற நாடுகளுக்கு அப்பால் சீனா மற்றும் வடகொரியாவுடன் தொடர்புபட்ட விவகாரங்களிலும் தலையீடு செய்துள்ளார்.



**பிரதமர் மோடியின் பாராட்டுப் பெற்றவர்**

சீனாவிற்கான தூதுவராக கோகலே பணியாற்றிய வேளையில், சீனாவுடனான மோடி அரசாங்கத்திற்கு ஏற்பட்ட பல்வேறு விவகாரங்களைத் திறமையுடன் கையாண்டுள்ளார். கடந்த ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் ஒகஸ்ட் வரை இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் நீடித்த டோக்லம் இராணுவ விவகாரத்தைத் தணிப்பதில் கோகலே மிக முக்கிய பங்காற்றியிருந்தார்.

சீனா தொடர்பில் கோகலேயால் முன்னெடுக்கப்பட்ட கடும்போக்கு நிலைப் பாடு மற்றும் இந்திய இராஜதந்திர ரீதியான இவரது மிகச் சிறந்த நடவடிக்கைகள் போன்றன கோகலே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பாராட்டைப் பெறுவதற்கு வழிவகுத்தன.

**டோக்லாம் இராணுவ விவகாரத்தைத் தணிப்பதில் முக்கிய பங்காற்றியவர்**

இதுவே இவர் இந்திய வெளிவிவகாரச்செயலராக நியமிக்கப்படுவதற்கும் பங்காற்றியுள்ளது.

விஜய் கோகலே இந்திய வெளி விவகாரச் செயலராக நியமிக்கப்படவுள்ளமை சீனா தொடர்பான இந்தியாவின் அணுகுமுறையில் கணிசமான எவு மாற்றத்தை ஏற்படுத்தும் என சில இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கோகலேயின் வெளிவிவகாரச் செயலர் நியமனம் குறிப்பிடத்தக்க மாற்றம் என எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதே உண்மையாகும். மோடி பதவிக்கு வந்த பின்னரும், அஜித் டோவல் இந்தியாவின் தேசிய ஆலோசகராகவும் எஸ்.ஜெய்சங்கர் இந்தியாவின் வெளிவிவகாரச் செயலராகவும் நியமிக்கப்பட்ட பின்னரும்



சீனா தொடர்பான இந்தியாவின் அணுகுமுறை மாறத் தொடங்கியது.

இந்தியாவின் இராஜதந்திர முறைமையின் பெறுபேறும் கோகலே இந்தியவெளிவிவகாரச்செயலராக நியமிக்கப்படவுள்ளமையில் செல்வாக்குச்செலுத்துகிறது. இந்தியாவில் இராஜ தந்திர கொள்கை உருவாக்கம் பிரதமர் அலுவலகம், செல்வாக்குமிக்க ஆலோசகரின் தலைமையிலான தேசிய பாதுகாப்புச் சபை மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகிய மூன்று திணைக்களங்களால் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியாவின் இராஜதந்திரக் கோட்பாடு இறுதியாக இந்தியப் பிரதமரால் தீர்மானிக்கப்படுகிறது. கோகலேயின் இராஜதந்திர ஆற்றலானது மோடிக்கு உதவும் என்பதுவும் கோகலேயின் நியமனத்திற்கான பிறிதொரு காரணியாகும்.

**தலைவர்களின் எதிர்பார்ப்பு**

இந்தியா அனைத்துலக நிலைமைக்கு ஏற்ப சில சிறிய சீர்ப்படுத்தலைச் செய்வதைத் தவிர சீன விவகாரத்தில் இது தொடர்ந்தும் கடும்போக்கு அணுகு முறையையே கடைப்பிடிக்கும் என்பதையே கோகலேயின் புதிய நியமனம் சுட்டிக் காட்டுகிறது.

மோடி இந்தியப் பிரதமர் பதவிக்கு வந்ததன் பின்னர், இந்தியாவின் அபிவிருத்தி தொடர்பான இந்தியத் தலைவர்கள் சாதகமான பெறுபேற்றை எதிர்பார்த்தனர். அதாவது, இந்தியாவானது அபிவிருத்தியில் ஆசியாவின் பல்துருவ மாக அல்லது உலகின் பல்துருவ மாக மாற்றமுறும் என இந்தியத் தலைவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

குறிப்பாக சீன அமெரிக்க ஒத்துழைப்பு தொடர்பாக இவர்கள் அதிகம் கவலை கொள்கின்றனர். சீனா, ஆசியாவின் அதிகாரம்மிக்க நாடாக மாறிவரும் நிலையில் அமெரிக்காவுடனான சீனாவின் ஒத்துழைப்பு இந்தியாவுக்கு கவலை அளித்துள்ளது.

சீனாவால் மேற்கொள்ளப்படும் பொருளாதார ஒத்துழைப்புச் செயற்பாடுகளை இந்தியாவின் அச்சகம் பூகோள அரசியல் போட்டியாக நோக்குகிறது. குறிப்பாகச் சீனாவால் மேற்கொள்ளப்படும் ஓர் அணை ஒரு பாதைத் திட்டம், சீன பாகிஸ்தான் பொருளாதார நடைபாதைத் திட்டம், நேபாளம், பங்களாதேஷ், இலங்கை போன்ற தென்னாசிய நாடுகளுடனான சீனாவின் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டங்கள் போட்டியை ஏற்படுத்துவனவாகவும் இது தனது நலன்களுக்கு பங்கம் விளைவிப்பனவாகவும் இந்தியா கருதுகிறது. சீன பாகிஸ்தான் உறவுகளை புதுடில்லி மிகப் பலமாக எதிர்த்து வருகிறது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பதவிக்கு வந்த பின்னர் இந்திய பசுபிக் தொடர்பாக இந்தியாவின் அனைத்துலக நிலைப்பாட்டை மேம்படுத்துவதற்கான திட்டத்தை முன்வைத்துள்ளார். இதற்கு சீனாவே பெரியதொரு மூலோபாய போட்டியாளராகத் திகழும் எனவும் அமெரிக்க அதிபர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்திய பசுபிக் மற்றும் யூரேசியன் பிராந்தியங்களில் இந்தியா சமவலுவைப் பேணமுடியும் என்பதுடன் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் வளர்ந்து வரும் சீனாவின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதே இந்தியாவின் உண்மையான நோக்கம் என்பதிலும் அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளதையும் இந்தியர்கள் நன்கறிவார்கள்.

இந்நிலையில், இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையிலான எதிர்கால உறவுநிலை மேலும் விரிசலடையும் என எதிர்வு கூறப்படுகிறது.

அண்மைய ஆண்டுகளில், தாய்வான் அதிகாரிகளுடன் இந்திய அரசாங்கம் இரகசிய உறவைப் பேணி வருகிறது. நீரிணைக்கு அப்பாலான விவகாரங்கள் மற்றும் சீனக் கோட்பாடுகள் தொடர்பாக நன்கறிந்துள்ள கோகலே, இந்திய–சீன விவகாரங்களைத் திறம்படக் கையாள்வார் எனவும் இந்தியக் கோட்பாட்டை சீனா ஏற்றுக்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜால் மேற்கொள்ளப்பட்ட தவறுகளைச் சரிசெய்வதிலும் சிறந்த பங்காற்றுவார் என நம்பப்படுகிறது. ★

**கடந்த ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் ஒகஸ்ட் வரை இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் நீடித்த டோக்லம் இராணுவ விவகாரத்தைத் தணிப்பதில் கோகலே மிக முக்கிய பங்காற்றியிருந்தார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்





# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 405

தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா

**ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வாதிகார சிக்கன நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வருவதாக வாக்குறுதி அளித்ததாலேயே சிப்ராஸ் 2015 இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடந்த ஏழு ஆண்டுகளாக கிரேக்க தொழிலாளர்கள் தங்களின் வருமானத்தில் 40 சதவீதம் அளவுக்கு இழந்து, சமூக அமைப்பு முறை பொறிந்து போயுள்ள விளைவுகளோடு சேர்ந்து, பிரதமரினதும் அவர் சிக்கனக் கொள்கைகளை இன்னும் தீவிரப்படுத்தினார். 18 ஆயிரம் மருத்துவர்களும் இன்னும் பலரும் அந்நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர்.**



முதலாளித்துவப் பத்திரிகைகள் குறிப்பிடுவதற்கு எதிர்முரணாக, ஐரோப்பிய ஒன்றியமும் அதற்கு முன்பிருந்த அமைப்புகளும் ஒரு போதும் ஐரோப்பாவின் ஐக்கியத்தின் உருவடிவமாக இருக்கவில்லை. அவை எப்போதுமே உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தனது நலன்களைப் பின்தொடரும் ஆளும் வர்க்கத்தின் கருவிகளாகவே இருந்தன. அவை பெருநிறுவனங்கள் மற்றும் வங்கிகள் அவற்றின் நலன்களுக்காக அந்தக் கண்டத்தை ஒழுங்கமைக்க உதவின.

ஆனால், சமூக பதற்றங்களும் சர்வதேச மோதல்களும், குறிப்பாக முன்னாள் பாதுகாப்பு பலமாக விளங்கிய அமெரிக்காவுடன் அதிகரிக்கின்ற நிலையில், கடந்த நூற்றாண்டில் இரண்டு முறை ஐரோப்பாவை போர்க்களமாக மாற்றிய ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் பிளவுகள் மீண்டுமொரு முறை மேற்பரப்புக்கு வந்துகொண்டிருக்கின்றன.

சமூக சமத்துவமின்மையின் அதிகரிப்பு, ஒருபோதும் முடிவில்லாத சமூக வெட்டுக்கள், தொழிற்சந்தைச் சீர்திருத்தங்கள் மற்றும் சமூகச் செலவினக் குறைப்பு நடவடிக்கைகள் ஆகியவை பாரம்பரியக் கட்சிகள் மீதான நம்பிக்கையையும், இந்த நிகழ்வுபோக்கிற்குப் பிரதான பொறுப்பைத் தாங்கியுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் மீதான நம்பிக்கையையும் அழித்துவிட்டுள்ளது. சமூக ஜனநாயகக் கட்சிகள், தொழிற்சங்கங்கள் ஆகியவையும் பசுமைக் கட்சி மற்றும் சிரிசா போன்ற குட்டி - முதலாளித்துவக் கட்சிகளும் ஐயத்திற்கிடமின்றி இத்தகைய தாக்குதல்களையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் ஆதரிப்பதால், எதிர்ப்பிலிருந்து இப்போதைக்கு வலதுசாரிகளும், தேசியவாத மற்றும் நவ - பாசிசவாதக் கட்சிகளும் கூட பிரதானமாக ஆதாயமடைகின்றன.

ஆனால், இது நீடிக்காது. தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களிடையே இடதுசாரி உணர்வு மேலோங்கி உள்ளது. பலரும் வலதுசாரிக் கட்சிகளை வெறுக்கின்றனர். அத்துடன், இராணுவவாதம் மற்றும் முதலாளித்துவத்தை எதிர்க்கின்றனர். இந்த உணர்வுகளுக்கு ஓர் அரசியல் நோக்குநிலை தேவை. உலகெங்கிலும் போர் தொடுப்பதற்காக, ஒடுக்குமுறை அரசு எந்திரத்தைப் பலப்படுத்துவதற்காக மற்றும் சமூக வெட்டுக்களை ஒழுங்கமைப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தை ஓர் இராணுவக் கூட்டணியாக மாற்றுவதற்கு ஒரு பதில், தேசிய அரசுக்குள் திரும்புவதில்லை. அதற்கு மாறாக, அது ஐரோப்பிய ஐக்கிய சோசலிச அரசுகளாக ஆக்கப்பட வேண்டும்.




## புட்டின் சிரியாவுக்கு ‘‘பணி நிறைவேற்றப்பட்டது’’ என்ற பயணத்தை மேற்கொண்டார்

அண்மையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் சிரியாவுக்கு திடீரென விஜயம் செய்து, நாட்டின் கடற்கரை மாகாணமான லட்டாக்கியாவில் உள்ள Hmeimim விமானத் தளத்தில் ரஷ்யத் துருப்புக்கள் முன்னிலையில் ஒரு புகழ் பாடும் உரையை நிகழ்த்தினார். அத்தோடு, சிரிய ஜனாதிபதி பஷார் அல் - அசாத்தை சந்தித்துப் பேசினார்.




இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பிருந்து அசாத் கேட்டுக்கொண்டதன் பேரில் சிரியாவிற்குள் ரஷ்யா தலையிட்டு விமான உதவியையும் மற்றும் பிற உதவிகளையும் வழங்கியமை, சி.ஐ.ஏ., துருக்கி, சவூதி அரேபியா மற்றும் சன்னி வளைகுடா எண்ணெய் முடியாட்சிகள் ஆகியவற்றின் மூலமாக ஆயுதங்களையும், நிதியுதவியையும் பெற்றிருந்த அல் கொய்தாவுடன் இணைந்த ‘போராளிகள்’ அடைந்திருந்த செல்வாக்கை மாற்றுவதில் உள்ள நெருக்கடியை நிரூபித்தது.

ஈராக் மற்றும் சிரிய இஸ்லாமிய அரசின் (Islamic State of Iraq and Syria - ISIS) மீதான ஒரு முற்றுமுழுதான வெற்றியைக் குறித்து அவரும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகமும் அறிவித்து சில நாள்களுக்குப் பின்னர் புட்டினின் விஜயம் இருந்தது. இவ்விஜயம், சிரியாவின் அனைத்து முக்கிய நகரங்களுக்கும் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் கிழக்கு டெய்ர் ஏஜோர் மாகாணத்தில் உள்ள யூப்ரடீஸ் ஆற்றின் (Euphrates River) குறுக்கே உள்ள ஒரு சில சிறிய பகுதிகளுக்கும் சென்று முடிவடைந்தது.

**சிரியாவில் இருந்து ரஷ்ய இராணுவப் பிரிவின் ஒரு கணிசமான பகுதியை மீளப்பெற இராணுவத்திற்கு உத்தர விட்டுள்ளேன் எனப் புட்டின் தெரிவித்தார். அதேநேரத்தில், 2015 வீழ்ச்சிக்குப் பின்னர், அந்த நாட்டில் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைகளுக்கான கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையமாக இருந்து வரும் Hmeimim விமானத் தளத்தில் இராணுவம் தக்கவைத்துக் கொள்ளப்படும் என்பதையும், அத்துடன் சிரியாவின் மத்திய தரைக்கடல் துறைமுக நகரமான டார்ட்டஸில் அமைந்திருக்கும் ரஷ்யக் கடற்படைத்தளம் தொடர்ந்து இயங்கும் என்பதையும் மாஸ்கோ தெளிவுபடுத்தியுள்ளது.**

ரஷ்யத் துருப்புக்களின் முன்னிலையில் புட்டின் ஆற்றிய உரையில், தீவிரவாதிகள் மீண்டும் தலை தூக்குவார்களானால், அவர்கள் முன்னெப்போதும் கண்டிராத வகையில், அவர்களை நாங்கள் முழுவீச்சுடன் தாக்குவோம் என்று அறிவித்தார்.

புட்டினின் சிரியாவிற்கான பயணத் திட்டம் அவரது விமானம் அங்கு சென்று தரையிறங்கும் வரை இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. மற்றுமோர் ஆறு ஆண்டு காலத்திற்கு புட்டினைப் பதவியில் அமர்த்திய ரஷ்ய ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு வெறும் மூன்று மாதங்களுக்கு முன்னர் வருகை தந்த போது, ரஷ்ய ஜனாதிபதியின் உரை, உலக அரங்கில் ரஷ்யாவின் தேசிய நலன்களுக்கான ஒரு பாதுகாவலனாக தனது நற்பெயரை வளர்த்துக்கொள்ளும் நோக்கம் கொண்டதாக, பணி நிறைவேற்றப்பட்டது என்ற கருத்தாக்கத்தைக் கொண்டிருந்தது.

ரஷ்யாவின் தலையீடு சிரியாவின் இறையாண்மையைப் பாதுகாத்து, 2011 இல் தொடங்கிய இரத்தம் தோய்ந்த போரை முடிவுக்குக் கொண்டு வந்தது. ஆயினும், அவை சந்தேகத்திற்கு இடமின்றி காலத்திற்கு முற்பட்டதாகவே உள்ளன என்று அவர் கூறுகிறார்.


(கேள்வி தொடரும்...)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 7

### தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தாக்குதல் போராட்டம் (06.06.1992)

**த.ஜெயசீலன்**

1993 இல் கவிதைப் போட்டி மூலம் கழகத்திற்கு வந்தவன் இவன். இவனும் யாழ். இந்துக் கல்லூரி மாணவனே. கழகத்தில் இணைந்தபோது பல்கலைக் கழகத்தில் மாணவனாய் இருந்தான். இவனது போட்டிக் கவிதை அப்போதே, ஒரு கவியரங்கக் கவிதை போல் தரம் பெற்றிருந்தது. இவனது ஆற்றலை இனங்கண்டு இவனுக்குப் பரிசு வழங்க வேண்டுமென நான் எவ்வளவோ போராடினேன். போட்டி நடுவர்களான, கவிஞர் முருகையனும் கல்வயல் குமாரசாமியும் பரிசுக்குரியவனாய் இவனை ஏற்க மறுத்து விட்டனர். அதனால், போட்டியில் இவனுக்குப் பரிசு வழங்கப்படவில்லை. ஆனாலும், அந்த ஆண்டுக் கழகக் கவியரங்கத்தில் நாம் அவனை ஏற்றினோம். தரமாய்ப் பாடிப் பலரது மனதிலும் பதிந்தான்.

பின்னர் 1995 இல் கழகத்தின் புதிய நிர் வாகம் நியமிக்கப்பட்ட போது, அதில் பொருளாளராய்ப் பொறுப் பேற்றான். அவ்வாண்டு நடந்த இடப்பெயர்வில் நாங்கள் கொழும்பு சென்று விட, தனது உயிர் அச்சம் தவிர்த்து பிரசாந்தனுடன் சென்று கம்பன் கோட்டத்தை இராணுவத்திடமிருந்து மீட்டவன் இவன். நானும் இரத்தினகுமாரும் குமார தாசனும் சிவசங்கரும் பிரசாந்தனும் கொழும்புக்கு இடம் பெயர்ந்த பின், 'நிலாக்கால நிகழ்ச்சிகள்' மூலம் தனித்துச் சிலகாலம் கழகத்தை யாழில் இயக்க முயன்றான் பின் சற்றுச் சோர்ந்து தூரப் போனான். இவன் எம்மேல் கொண்ட அன்பு சத்தியமானது. அவன் மேல் நாம் கொண்ட அன்பும் சத்தியமானது. சிவசங்கர், பிரசாந்தன், மணிமாறன் அளவிற்கு, தன்மேல் எனக்கு அன்பில்லையோ எனும் ஐயப்பாடு அவன் அடி மனதில் என்றும் உண்டு, இன்றும் உண்டு. அளவுக் கதிகமான ரோஷம் இவனது குறைபாடு. அதைத் தாழ்வுச் சிக்கல் என் றும் சொல்லலாம். கொஞ்சம் கஞ்சத்தனமும் தொட்டாற்சுருங்கி மனநிலையும் கொண்டவன். தன்னையும் தனது கவிதைகளையும் பாராட்டியன்றி குறை சொல்லி எவரும் விமர்சிக்கக் கூடாது என நினைப்பவன். நாங்கள் கொழும்பு சென்ற பிறகு, இவனின் போக்கு கொஞ்சம் மாறியது. அறிவுலகத் தின் அங்கீகாரம் தேட முனைந்தான். ஆரம்பத்தில் இவனைக் கவிஞனாய் ஏற்கமறுத்த முருகையனை, பின்னாளில் குருவாய்க் கொண்டு பக்தி காட்டினான். அவனது அந்த சுய விருப்பச் செயற்பாட்டில் எமக்கு எந்த மாறுபாடும் இருக்கவில்லை. ஆனால், அது பற்றி நாம் ஏதேனும் நினைப்போமோ எனும், மனக்குறு குறுப்பு இருந்திருக்கும் போல. அதனால் தானோ என்னவோ பின் னாளில், நாம் அவனை 'மேய்க்க' நினைப்பதாயும் அதற்கு நான் அடிபணியப் போவதில்லை என்பதாயும் நன்றி மறந்து மிகக் கேவலமாய் ஒரு கவிதை எழுதினான். இதுதான் அவனுடைய எழுதிய கவிதை.

*சுயம்*
*நாயாய் இருப்பதற்கு நான்*
*தயார்தான்!*
*சோறுவைத்து*
*நாளும் அணைப்பவரை நக்கி,*
*அவர் வருங்கால்...*
*வாலாட்டி,*
*அவர்களது மகிழ்ச்சிகளில்*
*நான்துள்ளி,*
*சோகத்தில் அவர்களுடன்*
*சுருண்டு விழிசிந்தி,*
*ராவு பகலெல்லாம் "காவற்*
*துறையாக"*
*வீடுதனைச் சுற்றி,*
*வேலிமீறும் ஆடுமாட்டை*
*ஓடித்துரத்தி, ஒருபொழுது*
*அவர்களுடன்*
*பந்தடித்தும் விளையாடி,*
*அவர்கள் உதைத்தாலும்...*
*வந்து முதுகுரஞ்சி, பின் எந்*
*தன் பாட்டில்,*
*'வெளிக்குந்தில்' அநாதை*
*யைப் போற் குறண்டி,*
*கடன் தீர்க்கும்*
*நாய் போற் கிடப்பதற்கு நான்*
*தயார்தான்*

*அதற்காக*
*"வளர்ப்போர்க்கு மட்டுந்தான்*
*வணக்கஞ் செலுத்தோணும்.*
*வளர்ப்போரின் வீட்டுக்கு*
*மட்டும் உழைக்கோணும்.*
*வளர்ப்போரைச் சாடுவோரை*
*வடிவாய்க் கடிக்கோணும்.*
*வளர்ப்போர்கள் செய்வதெல்*
*லாம்*
*"சரி" யென்றுரைக்கோணும்.*
*வளர்ப்போர்கள் சொல்லி*
*விட்டால்...*
*வாய்பொத்தி, வாலாட்டி,*
*குலைக்கோணும்.*
*வளர்ப்போர்கள் "வா" என்றாற்*
*போகோணும்.*
*வளர்ப்போர்க்காய்*
*என்னுணர்வை,*
*என் விருப்பை,*
*என் வாழ்வைப்*
*புதைக்கோணும்" என்று*
*புவி மக்கள் எதிர்பார்த்தால்...*
*நாயாய் அவதரிக்க நான் விரும்ப*
*மாட்டேனாம்!*

*ஒன்றுரைப்பேன்*
*"வளர்த்தோம் நாம்" என்ப வர்க்கு*
*ஒன்றுரைப்பேன்.*
*மண்ணிலுள்ள மனிதன் நான்,*
*என் மானம் மலடில்லை,*
*நன்றியுள்ள மிருகம் நாய், அது*
*அடிமை ஜென்மமில்லை!*

அவனோடு நாம் பகை கொள்ள வேண்டிய தருணம் அது. ஆனாலும், எமக்குள்ளும் அவனுக்குள்ளும் இருந்த உண்மை அன்பு. அச்சிறு விடயத்தைப் புறத்தள்ளிற்று, எனக்கென்னவோ முருகையனுடனான அவனது சேர்க்கையின் பின் இவனது கவிதையில் இருந்த இயல் புணர்ச்சி குன்றியதாகவே தோன்றுகிறது. நான் அன்போடு இவனை நெறி செய்ய நினைக்கும் போதெல்லாம் இவன் ஏதோ நான் அவனை வீழ்த்த நினைப்பதாய் எண்ணி மிரள்வான். என்னோடு முரண்பட்டு இவன் எழுதிய பல கடிதங்கள் கழகக் கோப்புகளில் இன்றும் இருக்கின்றன. கழகத்தோடு நெருங்கினால், தன்னைக் கழகம் விழுங்கிவிடுமோ எனும் அச்சத்தினால், கோடு கீறி புறம் நின்று வாழ்பவன். எங்களுள் கரைந்து போக விருப்பமின்றியும் பிரிந்து போகவிருப்பமின்றியும் தடுமாறி நிற்பவன். கழகம் எங்களது எனும் உரிமையை இவன் என்றும் விட்டதில்லை. முழுமையாய்த் தொட்டதும் இல்லை.

நல்லூர் முருகனின் பெரும் பக்தன். போர்க்காலத்தில் வீரியமாய்க் கவிதைகள் பல பாடி னான். போர் முடிந்ததும் மற்றவர்கள் போல் கொள்கை மாறவில்லை என்றாலும் தன் சுதந்திர வீரியத்தை சற்றுக் குறைத்துக் கொண்டான். தன் கவிதைகளை நான் ஆழ ரசித்து விமர்சிப்பதில்லை எனும் குறை , இவனுக்கு எப்போதும் உண்டு. மேற் சென்று இடிக்கும் விமர்சனங்களை ஏற்கா இவன் மனநிலையே, எனது அச்செயலின் அடிப்படை. கவிதைப் போட்டியில் இவனைத் தகுதியில்லாதவன் என்று தள்ளி வைத்த, முருகையனையே தனது குருவாய் நினைப்பது இவனது தகுதி. இன்று ஈழத்தில் தரமான கவிஞனாய் இவனுக்கோர் பதிவுண்டு. நிர்வாகச் சேவையில் இணைந்து இன்று உதவி அரச அதிபராய் இருக்கின்றான். அப்பதவிக்கேற்ற ஆளுமை இவனிடம் இன்னும் வரவில்லை என்பது, இவன்மேலான எனது குறைபாடு. கழகச் செயற்பாடுகளில் இன்றும் இவனது துணை உண்டு. எம்முடன் தொடர்போடும் அன்போடும் தொடர்ந்து இயங்குகிறான். இவனது மாமனார் எங்கள் கழகத்தின் பரம இரசிகர்.

★ ★ ★

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# நாடு கடந்த தமிழீழ அரசவை அமர்வுகளை கண்காணிக்கிறதாம் இலங்கைத் தூதரகம்!

கொழும்பு, ஜன. 22

கனடாவில் நடந்து வரும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வுகளை கனடாவில் உள்ள இலங்கைத் தூதரகம் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது என்று கொழும்பு ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இரண்டாவது அரசவையின் 8 ஆவது கூட்டத் தொடர், கனடாவின் ரொரன்டோ நகரில், ஜனவரி 19 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று வரை நடந்தது.

இந்தக் கூட்டத் தொடர் குறித்து, கனேடிய வெளிவிவகார அமைச்சிடம், இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரபூர்வமாக எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

எனினும், தனிநாட்டுக் கொள்கையை ஊக்குவிக்கும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வு, கனடாவில் நடந்து வருகிறது.

இந்த நிலையில், அங்குள்ள இலங்கைத் தூதரகம் அதனை உன்னிப்பாக கண்காணித்து வருகிறது என அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன என்றும் இந்த கொழும்பு ஆங்கிலவார இதழ் கூறியுள்ளது.



## குறைபாடுகளின்றிய அறிக்கையே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது

### சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பிணைமுறி மோசடி தொடர்பிலான அறிக்கை குறைபாடு களின்றி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள் ளார்.


கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிணைமுறி மோசடி தொடர்பான அறிக்கை எந்தவிதமான குறைப்பாடுகளும் இன்றி முழுமையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை .

அத்துடன், ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, பதுளை மகளிர் தமிழ் பாடசாலை அதிபரை அச்சுறுத்திய சம்பவத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கண்டிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புத்தளம் கடல் பகுதிக்கு படையெடுக்கும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள்!





வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பெருமளவிலானோர் புத்தளம் கடல் பகுதிக்கு படையெடுக்கின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

புத்தளம் கற்பிட்டி கடற் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ள Kitesurfing விளையாட்டே அதற்கு காரணமாகும்.

இதற்கு முன்னர் அருகம்பே பிரதேசத்தில் இயங்கிய Kitesurfing எனப்படும் பட்ட விளையாட்டு தற்போது கற் பிட்டி கடலிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரதேசத்தின் ஆழ மற்ற கடல் பகுதியும், அளவான காற்று வீசுவதனால் Kitesurfing விளையாடுவது ஒரு பாக்கியமாகும் என விளையாட்டில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.



சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்கும் நோக்கில், இலங்கையில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மஹிந்தவின் சகாக்கள் மீதும் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 22

பாரிய நிதி மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் கடந்த அரசில் பலருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

பெரும் நிதிமோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவால் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்கள கூட்டுத்தாபன தலைவர்கள், பணிப் பாளர்கள், நிபுணத்துவ மருத்துவ நிபுணர்கள், முன்னாள் இராணுவத் தளபதி ஒருவர் உள்ளிட்ட பலருக்கு எதிராக ஊழல் மோசடிகளில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தி பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

விமல் வீரவன்ஸ, மஹிந்த யாப்பா அபேவர்தன, மஹிந்தானந்த அலுத்கமகே, பசில் ராஜபக்ஷ, தினேஸ் குணவர்தன, ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ, குமார வெல்கம, ரோஹித அபேகுணவர்தன, ரிஷாட் பதியூதீன் போன்றோருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபயராஜபக்ஷ உள்ளிட்ட அதிகாரிகளுக்கு எதிராகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுஎன்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மஹிந்த ஆட்சிக்கால பிணைமுறிப் பத்திர விவகாரத்திற்கும் ஜனாதிபதி ஆணைக்குழு!

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு



மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நடந்த 4 ஆயிரம் பில்லியன் மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக விசாரணை நடத்த ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த அரசில் நடந்த ஊழல், மோசடிகளுடன் தொடர்புடையவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், அவர்கள் செய்த ஊழல், மோசடிகள் பற்றி எவரும் பேசவில் லை.

தற்போதைய அரசின் ஆட்சியில் மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர கொடுக்கல் வாங்கல்களில் 11 மில்லியன் ரூபாவே மோசடி செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின்விசாரணையில் இது தெரியவந்துள்ளது எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

## தமிழில் பொலிஸ் கீதம்!

பொலிஸ் கீதமும் வடக்கு, கிழக்கு மக்களுக்கு விளங்கும் வகையில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட கீதம் நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வின் போது பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கீதத்தின் மொழி பெயர்ப்பு இசையமைப்பாளர் கந்தப்பு ஜயந்தனினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

151 வருட பழைமையுள்ள பொலிஸ் வரலாற்றில் முதன் முறையாக பொலிஸ் மா அதிபர் புஜித ஜயசுந்தரவின் வழிகாட்டலின் பேரில் பொலிஸ் கீதம் தமிழில் இசைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பண மோசடி: அஞ்சலக அதிகாரிக்கு மறியல்!

கொழும்பு, ஜன. 22

மடுவில், இருபத்திரண்டு லட்சரூபா பண மோசடியில் ஈடுபட்ட அஞ்சல் நிலைய அதிகாரியை பதினான்கு நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

மடு அஞ்சல் அலுவலகத்தின் பிரதான அதிகாரியாக இருந்த இந்த நபர், கடந்த சில வருடங்களாக நிதி மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.



இது, உயர் அதிகாரிகளால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அவர் மீது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதன் பேரில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

விசாரணைக்கு பயந்த குறித்த அதிகாரி தலைமறைவானார். எனினும், சில நாள்களுக்கு முன் அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, இந்த அதிகாரியை இரு வார காலம் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.


(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. A பாடசாலை B பாடசாலையை விட பெரிது. A யும் C யும் சமமானவை. A பாடசாலை D பாடசாலையை விட சிறியது எனின், பெரிய பாடசாலை எது?
1) B  2) D  3) A

20. ஐந்து வாழைப்பழங்கள் வாங்கும் பணத்திற்கு ஒரு தோடம்பழம் வாங்கலாம். நான்கு தோடம்பழங்கள் வாங்கும் பணத்திற்கு ஓர் அன்னாசி வாங்கலாம். அன்னாசி இரண்டின் விலை ரூபாய் 120 ஆகும். ஒரு வாழைப்பழத்தின் விலை யாது?
1) ரூபாய் 5  2) ரூபாய் 3  3) ரூபாய் 6

21. இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




1) 49  2) 38  3) 36

22.



வட்டமொன்று புள்ளிக்கோடு வழியாக நான்கு சமபகுதிகளாக மடிக்கப்பட்டபின் உரு 2 இல் காட்டப்பட்டவாறு புள்ளிக்கோடு வழியே வெட்டப்பட்டால் கிடைக்கும் உரு
1) செவ்வகம்  2) செங்கோண முக்கோணி  3) சதுரம்

23. ஒரு மணித்தியாலத்தில் 60 km வேகத்தில் செல்லும் புகையிரதம் 2 km நீளமான சுரங்கத்தைக் கடந்து செல்ல வேண்டி இருந்தது. புகையிரதத்தின் நீளம் 500 மீற்றர் ஆகும். புகையிரதம் சுரங்கத்தைக் கடந்து வெளியே செல்ல எடுக்கும் காலம் எவ்வளவு?
1) 2 மணி 30 நிமிடம்  2) 2 நிமிடம் 30 செக்கன்  3) 2 நிமிடம்

24. புத்தகப்பை ஒன்றின் விலை XYX ஆகும். குடை ஒன்றின் விலை YXY ஆகும். X = 5, Y = 2 ஆயின், இரண்டு பொருட்களையும் வாங்குவதற்குத் தேவையான பணம் எவ்வளவு?
1) ரூபாய் 575  2) ரூபாய் 750  3) ரூபாய் 777


25. தரப்பட்ட கவிதையை வாசித்து கேட்கப்பட்ட வினாவுக்கு விடையைத் தெரிக.




களத்து மேட்டிலே வெள்ளைப்புறா
கொத்தித் தின்னுது வெள்ளைப்புறா

களத்து மேடு என்பது
1) வீட்டு மாடி  2) வயல்வெளி  3) தோட்டம்

26. பின்வரும் கவிதையின் நான்கு வரிகளின் சரியான ஒழுங்குமுறை யாது?
A- பூவரசம்பட்டை புளியம்பட்டை  B - வேம்பம்பட்டை தென்னம்பட்டை
C- பட்டணம் பட்டணம் பட்டணம்  D - மாம்பட்டை மருதம்பட்டை
1) B D A C  2) D B A C  3) D A B C

27.




1)   2)   3) 





17. தேசியக் கொடியிலுள்ள பச்சைநிறக்கீலம் குறிப்பது
1) தமிழ்மக்களை  2) சிங்களமக்களை  3) முஸ்லிம்மக்களை  4) பறங்கியர்களை


18. சுவர் கட்டும்போது சீமெந்துக் கல்லை கீழே விழாதவாறு கட்டுவதற்கு உதவுவது
1) தூக்குக்குண்டு  2) மணியாசக்கட்டை  3) மட்டப்பலகை  4) சவள்

19. தண்டுத்துண்டம் மூலம் பெருகும் தாவரம் அல்லாதது
1) மரவள்ளி  2) கங்குன்  3) வெற்றிலை  4) கத்தரி

20. வீட்டுத்தோட்டத்திற்கு நன்மை செய்யும் பிராணிகளின் கூட்டம்
1) கிளி, கறையான், நத்தை  2) செண்பகம், தேனீ, மண்புழு
3) சிலந்தி, வெட்டுக்கிளி, பன்றி  4) நண்டு, தவளை, எறும்பு, புழு

21. தோட்டத்தில் நேரடியாகக் குழிகளில் விதைக்கும் விதையல்லாதது
1) பயற்றை  2) வெண்டி  3) மிளகாய்  4) பூசினி

22.



இக்குறியீடு உணர்த்துவது
1) முன்னால் பாதுகாப்பான புகையிரதக் கடவை
2) முன்னால் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை
3) முன்னால் பேருந்து ஓட்டப்பாதை
4) முன்னால் அபாயமான சரிவு

23. நீருடன் கரையும் பிற திரவம்
1) வினாகிரி  2) தேங்காயெண்ணெய்
3) மண்ணெண்ணெய்  4) டீசல்


24. நட்டுக்களைக் கழற்றவும் இறுக்கவும் பொருத்தமான உபகரணம்
1) பொறிவெட்டி  2) புரிசாவி
3) கத்தரிக்கோல்  4) பூமுனைத்திருகாணி

25. வளவ கங்கை கடலுடன் கலக்குமிடம்
1) திருகோணமலை  2) சிலாபம்  3) காலி  4) அம்பாந்தோட்டை

26. பூமியின் உபகோள்
1) வியாழன்  2) சந்திரன்  3) சுக்கிரன்  4) சனி

27. ஆழமான கிணற்றிலிருந்து நீரை எடுக்கவும் உயரமான கட்டடத்திற்குச் சீமெந்துக்கலவை கொண்டு செல்லவும் பொருத்தமான பொறி
1) சில்லும் அச்சாணியும்  2) நெம்புகோல்
3) கப்பி  4) சாய்தளம்

28.



இக்குறியீடு உணர்த்துவது
1) முன்னால் குறுகிய பாலம்
2) முன்னால் நாற்சந்தி
3) முன்னால் சுற்று வளைவு
4) முன்னால் தேவாலயம்

29. விலங்குகளால் பரவும் வித்துக்களின் தொகுதி
1) முருங்கை, வேங்கை, பருத்தி  2) தோடை, ஆமணக்கு, ஆடைஒட்டி
3) கடல்மாங்காய், தாமரை, மருது  4) இறப்பர், கனகாம்பரம், வெடிபலவன்

30. காடுகள், சரணாலயம், வயல்கள் என்பவற்றைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம்
1) நீலம்  2) கறுப்பு  3) சிவப்பு  4) பச்சை

(30x1 = 30)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விக் கதிர் வெளியீடு


## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் **7**

தரம்-5 பிரபல ஆசிரியர் பகுதி I நேரம்- 45 நிமிடம்


- கீழே தரப்பட்டுள்ள முதல் படங்களை மேலே இருந்து பார்க்கும்பொழுது எவ்வாறு தோற்றமளிக்கும் என்பதைக் காட்டும் சரியான வடிவத்தின் கீழ் கோடிடுக .

01.




1) 2) 3)

02.



1) 2) 3)

03. கீழே தரப்பட்ட படங்களுள் சரியான படத்தைக் கண்டுபிடித்து அதன் கீழ்க் கோடிடுக.





1) 2) 3)

04. 1911 ஆம் ஆண்டு 20ம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்திற்கு உரியதாகும். இதற்கேற்ப 21 ஆம் நூற்றாண்டின் 5 ஆம் தசாப்தத்திற்குரிய ஆண்டு

1) 2049 2) 2059 3) 1949

- பின்வரும் படத்தை அவதானித்து 5ம் 6ம் வினாக்களிற்கு விடை தருக.




05. A யிலிருந்து E வரையுள்ள புகையிரதப் பாதையின் மொத்த நீளத்தின் அரைவாசித் தூரம் அமைந்திருப்பது எந்த இரு புகையிரத நிலையங்களிற்கு இடையிலாகும்?

1) ED 2) DC 3) DB

06. புகையிரதத்தில் A எனும் நிலையத்திலிருந்து ஏறிய ஒருவர் E எனும் நிலையத்தை அடைவதற்கு 75 நிமிடங்கள் எடுக்கின்றன. இடையிலுள்ள ஒவ்வொரு புகையிரத நிலையத்திலும் 5 நிமிடங்கள் புகையிரதம் தரித்து நிற்கிறது. புகையிரதமானது A யலிருந்து E வரை ஒரே வேகத்தில் பயணம் செய்கிறது எனின், புகையிரதம் 1 மணித்தியாலத்தில் செல்லும் தூரம் எத்தனை கிலோமீற்றர் களாகும்?

1) 11 km 2) 15 km 3) 12 km

07. போராட்டம், சமாதானம், பயங்கரம், சிம்மாசனம், சந்தர்ப்பம் என்பவற்றுள் அதிக எழுத்துக்களைக் கொண்ட சொல்லின் மூன்றாவது எழுத்தினைத் தெரிவுசெய்க.

1) த 2) ட் 3) ர்

08. நான், சுந்தர், குமார் ஆகிய மூவரிடமும் உள்ள மொத்தப் பணம் 100 ரூபாவாகும். என்னிடமிருக்கும் பணத்தைப் போல மும்மடங்கு பணத்தை சுந்தரும், சுந்தரின் பணத்தைப் போல் இருமடங்கு பணத்தை குமாரும் வைத்திருந்தனர். குமாரிடம் இருந்த பணத்தொகை எவ்வளவு?

1) 10 ரூபாய் 2) 60 ரூபாய் 3) 30 ரூபாய்





09. மகனின் வயது மகனின் வயதைவிட 5 மடங்குகள் அதிகமாகும். தந்தையின் வயதானது மகனின் வயதின் 5 மடங்காகும். மகனின் வயது 15 எனின், தந்தையினதும் மகனினதும் வயதுகளும் முறையே காட்டும் விடை

1) 55, 10 2) 40, 15 3) 50, 10

10. குமார் ஓர் எண்ணின் மூன்று மடங்கிலிருந்து 5 ஐக் கழித்தபின் வந்த விடையை 2 ஆல் பெருக்கி 3 ஐக் கூட்டினான். அவனுக்குக் கடைசியாக வந்த விடை 17 ஆகும். குமார் நினைத்த எண் என்ன?

1) 4 2) 5 3) 3


11. மஞ்சுளா 180 செக்கன்களில் 2 கணக்குகள் செய்வாள். கவிதா 20 நிமிடத்தில் 10 கணக்குகள் செய்வாள். கமலா 300 செக்கனில் 5 கணக்குகள் செய்வாள். இவர்கள் மூவரிலும் குறைந்த நேரத்தில் கூடிய கணக்குகளைச் செய்பவள் யார்?

1) கவிதா 2) கமலா 3) மஞ்சுளா

12. நான் பாடசாலை செல்லும் ஒவ்வொரு நாள் காலையிலும் அப்பா எனக்கு ரூபாய் 30 தருவார். தங்கைக்கு எனக்கு தரும் பணத்தை விட ரூபா 10 குறைவாகத் தருவார் எனின், ஒரு வாரத்தில் இருவருக்கும் அப்பா தரும் பணம் எவ்வளவு?

1) ரூபாய் 250 2) ரூபாய் 300 3) ரூபாய் 310

13.





1) 1250g 2) 1500g 3) 1150g

14. 1 mm தடிப்புள்ள கடதாசித் துண்டு ஒன்று மேலிருந்து கீழாக ஐந்து முறை மடிக்கப்பட்ட பின் அக்கடதாசியின் தடிப்பு யாது?

1) 5 மில்லிமீற்றர் 2) 20 மில்லிமீற்றர் 3) 32 மில்லிமீற்றர்


15. இது ஒரு சதுரமாகும். இச்சதுரம் BC புள்ளிக்கோடு வழியே மடிக்கப்பட்டு இரண்டாவது உருவில் காட்டப்பட்டுள்ளது.




இம்முக்கோணியின் சுற்றளவு யாது?

1) 15 cm 2) 18 cm 3) 24 cm

16.



இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு 4 ச.செ.மீற்றர் ஆகும். முழு உருவின் பரப்பளவு யாது?

1) 52 2) 50 3) 60

17. A, B, C என்னும் 3 கட்டடங்கள் உள்ளன. கட்டடம் B ஆனது கட்டடம் A யின் அரைவாசியாக அமையும் நிலையில் கட்டடம் C யானது கட்டடம் B யின் அரைவாசியாகும். கட்டடம் C இன் உயரம் 6 மீற்றர் எனின், கட்டிடம் A யின் உயரம் யாது?

1) 18 மீற்றர் 2) 30 மீற்றர் 3) 24 மீற்றர்

18. ஒரு சைக்கிள் சில்லு 5 முறை சுழலும் போது அது 20 மீற்றர் பயணம் செய்யும். அது 120 மீற்றர் பயணம் செய்யும் போது சில்லு எத்தனை முறை சுழலும்?

1) 30 2) 40 3) 60

# ஆப்கன் ஹோட்டலுக்குள் புகுந்து துப்பாக்கிதாரிகள் கடும் தாக்குதல்

### முன்னரே அமெ. எச்சரிக்கை விடுத்திருந்ததாம்



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள 'இண்டர்கொண்டினல் ஹோட்டலில்' குறைந்தது நான்கு துப்பாக்கிதாரிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஆப்கன் பாதுகாப்பு படையினர் அவர்களுடன் நேற்றுச் சமர் புரிந்தனர்.

நான்கு துப்பாக்கிதாரிகளில், இருவரைப் பாதுகாப்பு படையினர் கொன்றுள்ளனர் என்றும், மற்றவர்களைப் பிடிக்க முயன்று வருகின்றனர் என்றும் உள்துறை அமைச் சகத்தின் செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலை ஹோட் டலின் உள்ளே புகுந்த துப் பாக்கிதாரிகள், அங்கு தங்கியிருந்தவர்களைத் துப்பாக்கியால் சுட்டனர். அத்துடன் எறி குண்டுகளையும் வெடிக்க வைத்தனர்.

இந்தத் தாக்குதலில் குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அதிகாரிகள் கூறுகின்றனர். எத் தனை பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகத் தெரியவில்லை. உள்ளூர் நேரப்படி இரவு 9 மணிக் குத் தாக்குதல் தொடங்கியுள்ளது. ஹோட்டலில் இருந்த பாதுகாப்பு காவலர்களைச் சுட்டு விட்டு, ஐந்து மாடிக் கட்டடத்திற்குள் துப்பாக்கிதாரிகள் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



தாக்குதல் நடந்தபோது, மாகாண அதிகாரிகள் கலந்து கொண்ட ஐ.டி மாநாடு நடந்ததாக சில தகவல்கள் கூறுகின்றன. துப்பாக்கிதாரிகள், சிலரைப் பணயக்கைதிகளாக பிடித்து வைத்துள்ளனர் எனச் சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் கூறினார். காபூலில் உள்ள ஹோட்டல்கள் குறித்து அமெரிக்க தூதரகம் ஓர் எச்சரிக்கையை விடுத்த சில நாள்களில் இத்தாக்குதல் நடந்துள்ளது.


"காபூலில் உள்ள ஹோட்டல்களில் தீவிரவாதக் குழுக்கள் தாக்குதல் நடத்தத் திட்டமிடு கின்றமை குறித்து வரும் தகவல்கள் எங்களுக்குத் தெரியும்" என அமெரிக்கத் தூதரகம் கூறியிருந் தது.

மக்கள் தங்களது அறைகளில் ஒளிந்து இருக்கின்றனர் என ஒரு விருந்தினர் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளார். இந்த ஹோட்டல் 2011 ஆம் ஆண்டு தாலிபான்களால் தாக் கப்பட்டது. அப்போது ஒன்பது தலிபான்கள் உட்பட 21 பேர் கொல்லப்பட்டனர்.

(உ)

# செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதன்; அங்கு வலுத்தேவைக்கு அணுசக்தி

### அமெரிக்கத் திட்டம் தயாராம்



வொஷிங்டன், ஜன.22

நிலவிற்கு மீண்டும் மனிதர்களை அனுப்ப சில மாதங்களுக்கு முன் அமெரிக்கா முடிவெடுத்தது. அதற்கான திட்டத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

இந்நிலையில், தற்போது செவ்வாய்க்கு மனிதர்களை அனுப்ப நாசா புதிய திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. அங்கு மனிதர்களின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நவேடா மாகாணத்தில் நாசா வின் முதல்கட்ட சோதனை நடந்தது.

அணுசக்தி மூலம் விண்வெளியில் இருக்கும் பொருள்களை இயங்கவைக்க முயற்சி செய்யப்பட்டது. இதன் மூலம் செவ்வாய் கிரகத்தில் ஆராய்ச்சி செய்ய முடியும் என்று கூறப்பட்டது. இந்த முதல் கட்ட சோதனை ஓரளவு வெற்றி அடைந்துள்ளது.

அதன்பின் நாசா இரண்டாம் கட்ட சோதனையையும் செய்தது. ரோபோட் டிக் மெஷின், செயற்கைக்கோள் என அனைத்து பொருள்களிலும் அணு சக்தியை மின்சார தேவைக்குப் பயன்படுத்த முயற்சி செய்யப்பட்டது.

இந்த முயற்சி எந்த தவறுமின்றி நாசா அமைப்பால் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இதற்கு புளூட்டோனியம் 238 ஆக்சைட் என்ற அணு பயன்படுத்தப்பட்டு இருக்கிறது.

காகிதப் பொட்டலம் அளவிற்கு இது தேவைப்படும் என நாசா குறிப்பிட்டுள்ளது. இதை ஒன்றாக இணைய வைத்து அதன்மூலம் சக்தியை உருவாக்கிப் பொருள்களை இயங்க வைக்கலாம் என்று நாசா கண்டுபிடித்திருக்கிறது.

இதற்காக தற்போது ஒரு



மாதிரி இயந்திரம் உரு வாக்கப்பட்டுள்ளது.

இதை முழுமையாக வடிவமைத்த பின் எந்தக் கிரகத்திற்கும் செல்ல முடியும். எங்கும் எளிதாக மின்சார, சக்தி தேவைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் எனக் கூறப்படுகிறது.

இந்த தொழில்நுட்பம் தற்போது நாசாவிடம் மட்டுமே இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெ.பொருளாதார உதவிச் செயலர் பதவியில் இந்திய வம்சாவளிப் பெண்



அமெரிக்காவின் வெளியுறவுத் துறையின் பொருளாதார விவகாரங்களுக்கான உதவி செயலாளராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மனிஷா சிங் பதவியேற்றுள்ளார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மனிஷா சிங் அமெரிக்க வெளியுறவுத்துறையின் உதவி செயலாளராகப் பதவியேற்றார்

அமெரிக்க வெளியுறவுத் துறையின் பொருளாதாரம் சார்ந்த முக்கிய முடிவுகளை எடுக்கும் பொறுப்பு உதவி செயலாளர் வசம் உள்ளது. அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சருக்குப் பொருளாதாரம் தொடர்பான ஆலோசனை வழங்குவதும், வெளிநாடுகளுடனான பொருளாதார கொள்கைகளைத் தீர்மானிப்பதும் அவரது முக்கிய வேலைகளாகும். இந்தப் பதவியில் சார்ளஸ் ரிக்வின் இருந்து வந்தார். கடந்த ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பொறுப்பேற்றார். அவர் ராஜினாமா செய்தார். இதனால் அந்தப் பதவி வெற்றிடமாக இருந் தது.

வெற்றிடமாக உள்ள வெளியுறவுத்துறையின் பொருளாதாரவிவகாரங்களுக்கான உதவி செயலாளராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மனிஷா சிங் என்ற வழக்கறிஞர் நியமிக்கப்பட்டார். அவரது நியமனத்தை அமெரிக்க செனட் சபை உறுதி செய்தது. மனிஷா இப்பதவியை ஏற்கும் முதல் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மனிஷா சிங் நேற்றுமுன்தினம் அமெரிக்க செயலாளர் ரெக்ஸ் டில்லர்சன் முன்னிலையில் பதவியேற்றார். அப்போது பேசிய மனிஷா அமெரிக்காவின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவேன் எனக் கூறினார்.

# ட்ரம்ப் அரசின் 'பட்ஜெட்' தோல்வி; அரசுப் பணிகள் பலவும் முடங்கின



அமெரிக்காவின் ட்ரம்ப் அரசின் வரவு செலவுத் திட் டத்துக்கு ஒப்புதல் அளிக்க செனட் சபை மறுத்துள்ளதைத் தொடர்ந்து, அமெரிக்காவின் அரசுப் பணிகள் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

அத்தியாவசிய தேவைகள் தவிர பிற துறைகள் எவையும் இயங்கா. சுமார் ஐம்பது வீத அரசு துறைகள் இயங்காதென்று அந்நாட்டு பாதுகாப்பு செயலர் ஜேம்ஸ் மேட்டிஸ் கூறியுள்ளார்.

அதிபர் டொனால்ட் ட்ரம்பின் குடியரசு கட்சி, எதிர்க் கட்சியான ஜனநாயகக் கட்சி ஆகிய இரு கட்சிகளின் பெரும்பான்மை உறுப்பினர்களும் புதிய வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

அதனால் பாதிப்புகள் பல என அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவரும் வெளிநாட்டினருக்கான விசா மற்றும் கடவுச்சீட்டு நடைமுறைகள் இதனால் தாமதமாகும்.

அமெரிக்காவின் பெரும்பாலான மத்திய அரசு ஊழியர்கள் தங்கள் அலுவலகப் பணிகளைத் தொடர முடியாது. எனினும் அவசர கால மற்றும் பாதுகாப்பு சேவைகள் தொடரும்.

தேசியப் பூங்காக்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் மூடப்படும். அங்கு பொது மக்கள் யாரும் செல்ல முடியாது. செனட் வாக்கெடுப்புக்கு முன்பு வரை, பட்ஜெட் ஒப்புதல் தோல்வியடைந்தால், அவற்றை இயங்கச் செய்வதற்கான திட்டங்கள் உள்ளன எனச் செய்திகள் வெளியாகின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லி பட்டாசு கிடங்கில் தீ: 17 பேர் உடல் கருகிப் பலி

டில்லி,ஜன.22

டில்லி பாவானா பகுதியில் உள்ளபட்டாசுக் கிடங்கில் ஏற்பட்ட மோசமான தீ விபத்தில் 17 பேர் உடல் கருகி மரணம் அடைந்து இருக்கிறார்கள்.

நேற்றுமுன்தினம் மாலை இந்தத் தீ விபத்து ஏற்பட்டு இருக்கிறது. தீயைக் கட்டுப்படுத்த முடியாமல் தீயணைப்பு துறையினர் கஷ்டப்பட்டு உள்ளனர்.

இந்த தீ விபத்துப் பகுதியை டில்லி முதல்வர் 5 மணி நேரம் கழித்தே வந்து பார்வையிட்டார் எனக் குற்றச்சாட்டு எழுந்து இருக்கிறது. தற்போது இறந்தவர்கள் குடும்பத்துக்கு நிவாரண நிதி வழங்க அறிவித்துள்ளார் டில்லி முதல்வர்.

இந்தத் தீ விபத்து பாவானா தொழில்நுட்ப பகுதியில் இருக்கும் பட்டாசு கிடங்கில் ஏற்பட்டு இருக்கிறது.

தீ வேகமாகக் கட்டடம் முழுக்கப் பரவியுள்ளது. இந்தத் தீயை அணைக்க உடனடியாக அங்கு தீயணைப்பு படையினர் வந்துள்ளனர்.







2 மணி நேரம் கஷ்டப் பட்டு தீயை அணைக்க முடியாமல் அவர்கள் திணறி இருக்கிறார்கள். டில்லியில் ஏற்கனவே இருக்கும் புகையுடன் இந்தப் புகையும் சேர்ந்து இருக்கிறது. இந்த மோசமான தீயை 2.30 மணி நேரத்திற்கு பின் 3 தீ அணைப்பு வாகனங்கள் சேர்ந்து அணைத்து இருக்கின் றன.

இந்த விபத்தில் 17 பேர் மரணம் அடைந்து இருக்கிறார்கள். இதில் 7 பேர் பெண்கள். இவர்கள் அந்தப் பட்டாசுக் கிடங்கில் வேலை பார்த்தவர்கள். 2 பேர் மோசமான காயங்களுடன் உயிர் தப்பினர்.

இந்த இடத்திற்கு டில்லி முதல்வர் மிகவும் தாமதமாக வந்து பார்வையிட்டு இருக்கிறார். 5 மணி நேரம் கழித்துதான் அவர் இந்த இடத்திற்கு வந்துள்ளார். டெல்லியில் இருக்கும் கட்சிகள் முதல்வரின் இந்த மெத்தனப் போக்கிற்குக் கண்டனம் தெரிவித்து இருக்கின்றன.

தற்போது இறந்தவர் குடும்பங்களுக்கு டில்லி அரசு நிவாரண நிதி கொடுக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறது. ஒரு நபருக்கு 5 லட்சம் ரூபா நிவாரணம் அளிக்கப்படும் என்று டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறார். (உ)

**வேலைக்காரியாய் வந்தவர் உயிர்கொல்லியானார்:**

## மெல்லக் கொல்லும் விஷம் கொடுத்து ஜெயை கொன்றது சசிகலா குடும்பம்

அ.தி.மு.கவின் பொன்னையன் பரபரப்புக் குற்றச்சாட்டு

சென்னை, ஜன.22

பதவி ஆசையில் ஜெயலலிதாவுக்கு 'ஸ்லோ பொய்ஸன்' (மெல்லக் கொல்லும் விஷம்) கொடுத்து சசிகலா குடும்பத்தினர் கொன்று விட்டனர் என்று அ.தி.மு.க. செய்தித் தொடர்பாளர் பொன்னையன் பரபரப்பு குற்றச்சாட்டைத் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் பெரியார் தூண் அருகில் எம்.ஜி.ஆர். 101ஆவது பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு அ.தி.மு.க. மேற்கு மாவட்டச் செயலாளர் வாலாஜாபாத் பா.கணேசன் தலைமை வகித்தார். முன்னாள் அமைச்சர் சோமசுந்தரம் முன்னிலை வகித்தார். கூட்டத்தில், அ.தி.மு.க. செய்தி தொடர்பாளர் பொன்னையன் கலந்துகொண்டு பேசியவை வருமாறு:-

தமிழகத்தில் ஜெயலலிதா உயிருடன் இருந்த வரை கட்சியையும், ஆட்சியையும் இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

அவருக்கே எட்டு மாதமாக 'ஸ்லோ பொய்ஸன்' கொடுத்தனர். அப்பலோ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் போது 70 சதவீதம் உயிர் பிரிந்த நிலையில் அனுமதிக்கப்பட்டார். வேலைக்காரியாக உள்ளே வந்த சசிகலா படிப்படியாக அம்மாவை ஆட்டிவைக்கும் உயிர்கொல்லியாய் மாறி, தனது குடும்பத்தில் உள்ளவர்களைக் கட்சியில் சேர்த்து பதவிகளை அனுபவித்தார்கள்.

இந்தப் பதவி ஆசையில் சசிகலா குடும்பத்தினர் ஜெயலலிதாவை 'ஸ்லோ பொய்ஸன்'கொடுத்து கொன்றுவிட்டனர்.- என்றார்.

## கனிமொழி, ராசாவை விடுவித்த 2ஜி வழக்கிற்கு மேன்முறையீடு

### சி.பி.ஐக்கு உள்துறை அமைச்சகம் அனுமதி

2ஜி வழக்கில் ஆ.ராசா, கனிமொழி எம்.பி. விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு செய்கிறது சி.பி.ஐ.

இந்தியாவின் முன்னைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு 2 ஜி அலைவரிசை ஒதுக்கீட்டுக்கான உரிமங்கள் வழங்கியதில் அரசு ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டதாக மத்திய கணக்கு தணிக்கை துறை அதிகாரி வினோத்ராயின் அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது.

இது தொடர்பாக சி.பி.ஐ.யும், அமலாக்கத்துறையும் தனித் தனியாக வழக்குகள் பதிவு செய்து விசாரணை நடத்தின. இந்த வழக்கில் அப்போது தொலைத் தொடர்பு அமைச்சராக இருந்த ஆ.ராசா, தி.மு.கழக எம்.பி. கனிமொழி உள்ளிட்ட பலர் மீதும், சில நிறுவனங்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்டது.

இது தொடர்பான வழக்கை உச்ச நீதிமன்றத்தில் மேற்பார்வையில் டெல்லியில் உள்ள சி.பி.ஐ. தனி நீதிமன்ற நீதிபதி ஓ.பி.சைனி விசாரித்து வந்தார்.





நாடு முழுவதும் மிகவும் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட இந்த வழக்கில் கடந்த மாதம் 21ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது. '2ஜி' வழக்கில் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க அரசு தரப்பு தவறிவிட்டதால் ஆ.ராசா, கனிமொழி எம்.பி. உள்ளிட்ட அனைவரையும் விடுதலை செய்து நீதிபதி ஓ.பி.சைனி தீர்ப்பு கூறினார்.

**சி.பி.ஐ. மேல்முறையீடு**

இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்போவதாக அன்றே சி.பி.ஐ.யும், அமலாக்கத் துறையும் அறிவித்து இருந்தன.

தனி நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து டில்லி உயர் நீதிமன் றத்தில் மேன்முறையீடு செய்ய முடிவு செய்த சி.பி.ஐ., அதற்கான ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்து வந்தது. மேன்முறையீடு செய்வது தொடர்பான கோப்பை மத்திய உள்துறை அமைச்சகத்தின் அனுமதிக்காக சி.பி.ஐ. அனுப்பிவைத்தது. அதைப் பரிசீலித்த உள்துறை அமைச்சகம், 2ஜி வழக்கில் தனிநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்ய சி.பி.ஐக்கு அனுமதி வழங்கி இருக்கிறது.

**அமலாக்கத்துறை**

இதேபோல் அமலாக்கத் துறையும் மேன்முறையீடு செய்ய, உள்துறை அமைச்சகத்தின் அனுமதியைக் கோர இருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது.



## தலாய் லாமா வந்து திரும்பியதும் புத்தகாயாவில் குண்டு வெடிப்பு!

பிஹார் மாநிலத்திலுள்ள புகழ்பெற்ற ஆன்மீகத் தலமான புத்தகாயாவில் இரண்டு வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், அங்கு தேசிய புலனாய்வு அமைப்பின் (என்.ஐ.ஏ.) அதிகாரிகள் நேற்று முன்தினம் விசாரணை மேற் கொண்டனர்.

புத்தகாயாவில் உள்ள காலசக்ரா மைதானத்தில் திபெத் பௌத்த மதத் தலைவர் தலாய் லாமா வெள்ளிக்கிழமை இரவு உரையாற்றினார். நிகழ்ச்சி முடிந்து அவர் கிளம்பிச் சென்ற சிறிது நேரத்தில், அந்த மைதானம் அருகே வெடிச் சத்தம் கேட்டது. இதை யடுத்து, அப்பகுதியில் காவல்துறையினர் தீவிர சோதனை நடத்தினர். அங்கிருந்து 2 வெடிகுண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

மேலும், வெடித்த நிலையில் 'பிளாஸ்க்' ஒன்றும் கண்டெடுக் கப்பட்டது. இதிலிருந்து வெடிச் சத்தம் வந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக காவல் துறை உயரதிகாரி ஒருவர் கூறு கையில், 'கைப்பற்றப்பட்ட வெடி பொருள்களை வெடி குண்டு நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். இது தொடர்பாக புத்தகாயா காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது' என்றார்.

இதனிடையே, என்.ஐ.ஏ. குழுவினர், புத்தகாயாவுக்கு நேற்று முன்தினம் வந்தனர். பிஹார் மாநில பயங்கரவாத எதிர்ப்பு படையினருடன் இணைந்து, என்.ஐ.ஏ. குழுவினரும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்ட இடத்துக்கு அருகே யுள்ள சி.சி.டி.வி. கமராக்களில் பதிவான காட்சிகள் மூலம் விசாரணை நடைபெற்று வருகிறது. எனினும், இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

தலாய் லாமா தங்கியிருக்கின்றமையை ஒட்டி, புத்தகாயாவில் ஏற்கெனவே பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. தற்போது வெடிகுண்டு கண்டெடுக்கப்பட்ட நிலையில், கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

நகரின் பல்வேறு பகுதிகளில் காவல்துறையினர் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தீவிர சோதனைக்கு பிறகே, நகருக்குள் வாகனங்கள் அனுமதிக்கப்படுகின்றன.

முன்னதாக புத்த காயாயில் உள்ள மகாபோதி கோயிலில் கடந்த 2013ஆம் ஆண்டில் தொடர் குண்டுவெடிப்புகள் நிகழ்ந்தன. இதில் 2 புத்த துறவிகள் உட்பட 5 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியாவின் சுப்பர்மானாக வரப்போகும் சுப்மான் கில்

இந்தியா எப்போதுமே நியூஸிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா களங்களில் அதிகமாகச் சொதப்பும். ஆனால், இந்திய ஜூனியர் அணி அப்படி இல்லை. ஜூனியர் அணி அங்கு நடக்கும் ஒவ் வொரு போட்டியிலும் மிகவும் சிறப்பாக விளையாடிக் கொண்டு இருக்கிறது. முக்கியமாக இந்திய அணியின் சுப்மான் கில் என்ற வீரர் மிகவும் சிறப்பாக விளையாடி இருக்கிறார்.

இந்தத் தொடரில் வரிசையாக மூன்று போட்டியில் இந்தியா வெற்றிபெற்று இருக்கிறது. எந்த அணியும் தங்கள் விளையாடிய மூன்று போட்டியிலும் வெற்றி பெறவில்லை. இதில் இரண்டு போட்டி களில் இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுஉள்ளது.

இப்போது இந்திய அணி கால் இறுதி போட்டிக்குத் தகுதி பெற்று விட்டது. முதல் போட்டியில் ஆஸ்திரேலிய அணியைத் தோற்கடித்தது. அதன் பின் பப்புவா நியூ கினியா அணியைத் தோற்கடித்தது.

இந்த நிலையில், கடைசியாக நடந்த போட்டியில் ஸிம்பாப்பே அணியை எளிதாகத் தோற்கடித்தது.



இந்த போட்டியில் இந்திய ஆரம்பத் துடுப் பாட்ட வீரர் சுப்மான் கில் மிகவும் சிறப்பாக விளையாடினார். வெறும் 59 பந்துகளில் 90 ஓட்டங்கள் அடித்தார். கிட்டத்தட்ட ரி-20 போட்டி போலவே ஆடினார்.

13 பவுண்டரி ஒரு சிக்ஸர் என ஓட்டத்தாண்டவம் ஆடி இருக்கிறார். இவர் மீது ராகுல் ஏற்கனவே நம்பிக்கை தெரிவித்து இருந்தார். கடைசி போட்டியில் இவர் ஆட்டத்தை பார்த்துவிட்டு மிரண்டு போய் இருக்கிறார். இவர் விக்கெட்டை வீழ்த்துவதே மற்ற அணிகளுக்கு கஷ்டமாக இருக்கிறதாம்.

இதன் காரணமாகவே இந்தியா இரண்டு முறை 10 விக்கெட் வித்தியாசத்தில் வென்றுள்ளது. இவர் கடைசியாக ஆடிய அனைத்து போட்டி களிலும் சிறப்பாக ஆடியுள்ளார். 63, 32, 129, 0, 63, 90 என இந்திய 'ஏ' அணி வீரர்களுக்கு இணையாக ஆடி இருக்கிறார். பஞ்சாப்பை சேர்ந்த இவருக்கு தற்போது 18 வயது கூட முழுமையாக நிரம்பவில்லை. இப்போதே இவர் ராகுல் டிராவிட்டின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து இருக்கிறார்.

இன்னும் ஐ.பி.எல். ஏலம் வேறு இருக்கிறது. இவரை எப்படியும் ஏதாவது ஓர் அணியில் மிகவும் அதிக தொகை கொடுத்து எடுப்பார்கள் என்று கூறப்படுகிறது. இந்த மாத இறுதியில் நடக்க இருக்கும் ஐபிஎல் ஏலத்தில் இவரின் மதிப்பு தெரிய வரும்.



### நான்கு நாடுகள் ஹொக்கித் தொடர்:

# இறுதிச் சுற்று முதல் போட்டியில் பெல்ஜியத்திடம் தோற்றது இந்தியா



நியூஸிலாந்தில் நடைபெற்று வரும் நான்கு நாடுகள் ஹொக்கி தொடரின் இறுதிச் சுற்றின் முதற் போட்டியில் பெல்ஜியத்திடம் 1-2 என வீழ்ந்தது இந்தியா.

இந்தியா, நியூஸிலாந்து, பெல்ஜியம், ஜப்பான் அணிகளுக்கு இடையிலான நான்கு நாடுகள் ஹொக்கி தொடர் நடைபெற்று வருகிறது. லீக் ஆட்டத்தில் இந்தியா நியூஸிலாந்து மற்றும் ஜப்பான் அணியை வீழ்த்தியிருந்தது. பெல்ஜியத்திடம் தோல்வியைச் சந்தித்திருந்தது.

நேற்று நடைபெற்ற இறுதிச் சுற்றின் முதல் போட்டில் பெல்ஜியம் அணியை எதிர்கொண்டது.

ஆட்டத்தின் 4 ஆவது நிமிடத்தில் பெல்ஜியம் வீரர் டாம் பூன் கோல் அடித்து இந்தியாவிற்கு அதிர்ச்சி அளித்தார்.

அடுத்த சில நொடிகளில் இந்தியாவிற்கு சிறப்பான வாய்ப்பு கிடைத்தது. தில்ப்ரீத் சிங் கோல் எல்லையை நோக்கி பந்தை அடித்தார். ஆனால், பெல்ஜியம் தடுப்பாட்டக்காரர்கள் அதை எளிதாக தடுத்து விட்டனர்.



ஆட்டத்தின் 19 ஆவது நிமிடத்தில் மந்தீப் சிங் கோல் அடித்தார். இதனால் 1:1 என எண்ணிக்கை சமநிலை ஆனது.

ஆனால் , 36 ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் செபஸ்டியன் டாக்கியர் கோல் அடிக்க இந்தியா 1:2 எனத் தோல்வியை சந்தித்தது. இந்தியா இறுதிச் சுற்றின் 2 ஆவது போட்டியில் நியூஸிலாந்தை 24 ஆம் திகதி எதிர்கொள்கிறது. (உ)



# பார்வையற்றோருக்கான கிரிக்கெட் உலகக் கிண்ணம் இந்தியா வசம்

### பரபரப்பான இறுதியாட்டத்தில் பாகிஸ்தான் தோல்வி

பார்வையற்றோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட்டில் பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா 'சம்பியன்' ஆக வாகை சூடியதற்கு பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவிக்கின்றார்.

6 அணிகள் இடையிலான பார்வையற்றோருக்கான 5 ஆவது உலக கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடந்தது.

இதில் சார்ஜாவில் நேற்றுமுன்தினம் அரங்கேறிய இறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியன் இந்திய அணி, முன்னாள் சம்பியன் பாகிஸ்தானுடன் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதன் படி முதலில் துடுப்பெடுத்து ஆடிய பாகிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 40 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 308 ஓட்டங்கள் சேர்த்தது.

அடுத்து களம் புகுந்த இந்திய அணி 38.2 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 309 ஓட்டங்கள் குவித்து 2 விக்கெட் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றியை பெற்றதோடு, சம்பியன் பட்டத்தையும் தட்டிச்சென்றது.

இந்திய வீரர்கள் சுனில் ரமேஷ் 93 ஓட்டங்களும், கேப்டன் அஜய் திவாரி 62 ஓட்டங்களும் எடுத்து வெற்றிக்கு வழிவகுத்தனர். இந்த உலக கோப்பையில் இந்திய அணி தோல்வியே சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2 ஆவது முறையாக வாகை சூடிய இந்திய அணிக்கு துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, பிரதமர் நரேந்திர மோடி, பா.ஜ.க தலைவர் அமித்ஷா, மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

'இந்த வெற்றியின் மூலம் அவர்கள் நமது தேசத்தைப் பெருமைப்பட வைத்துள்ளார்கள். தங்களது ஆட்டத்தின் மூலம் ஒவ்வோர் இந்தியருக்கும் உந்துசக்தியாக இருக்கிறார்கள்' என்று பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார். (உ)

# ஐ.பி.எல்லில் 16 பேருக்கு முத்திரை வீரர்கள் அந்தஸ்து

## ஏலத் தெரிவில் 578 வீரர்கள்

ஐ.பி.எல். ஏலத்தின் இறுதிப் பட்டியலில் 578 வீரர்கள் தெரிவாகியுள்ளனர். 16 பேருக்கு முத்திரை வீரர்கள் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

11 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான வீரர்களின் ஏலம் வருகிற 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் பெங்களூரில் நடக்கிறது.

ஏலத்திற்கு மொத்தம் 1,122 வீரர்கள் தங்களின் பெயரைப் பதிவு செய்து இருந்தனர். அவர்களில் இருந்து 578 வீரர்கள் கொண்ட இறுதிப் பட்டியலை இந்திய கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் வெளியிட்டது. இவர்களில் 360 இந்தியர்களும் அடங்குவர்.

சர்வதேச போட்டிகளில் விளையாடிய வீரர்களுக்கு ரூ.2 கோடி, ரூபா, ஒன்றரைக் கோடி, ரூபா, ஒரு கோடி, ரூபா, 75 லட்சம் ரூபா, ரூபா, 50 லட்சம் ரூபா வீதமும், சர்வதேச போட்டிகளில் ஆடாத வீரர்களுக்கு ரூபா, 40 லட்சம் ரூபா, ரூபா, 30 லட்சம் ரூபா, ரூபா, 20 லட்சம் ரூபா என்ற வீதமும் அடிப்படை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

யுவராஜசிங், அஸ்வின், ரஹானே, ஷிகர் தவான், கவுதம் கம்பீர், ஹர் பஜன்சிங் (6 பேரும் இந்தியர்கள்), பென் ஸ்டோக்ஸ், ஜோ ரூட் (இங்கிலாந்து), மிட்செல் ஸ்டார்க், மேக்ஸ் வெல் (ஆஸ்திரேலியா), கிறிஸ் கெய்ல், கீரன் பொல்லார்ட், வெய்ன் பிராவோ (வெஸ்ட் இண்டீஸ்), கனே வில்லியம்சன் (நியூஸிலாந்து), கிப் அல்-ஹசன் (பங்களாதேஷ்), பாப்டு பிளிஸ்சிஸ் (தென்னாபிரிக்கா) ஆகிய 16 வீரர்கள் முத்திரை வீரர்கள் என்ற அந்தஸ்துடன் இரண்டு பிரிவாக பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய அபிவிருத்திக்கு உதவ தாய்லாந்து தயார்



புதிய நிகழ்ச்சித்திட்டங்களினூடாக, இலங்கையின் விவசாயத்துறையின் அபிவிருத்திக்கு உதவி வழங்குவதாகத் தாய்லாந்து தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்த, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் உள்ளிட்ட விவசாயத்திற்கான நவீன தொழிநுட்ப பயன்பாடுகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தாய்லாந்து மன்னரின் பணிப்புரைக்கு அமைய, இலங்கையின் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்காக, விவசாயத்துறைக்கு பல்வேறு உதவிகளைத் தமது நாடு வழங்கவுள்ளதாக தாய்லாந்து தூதுவர் இலங்கை ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

## ஊவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

திருக்கின்றார்.

பதுளையில் தமிழ்ப் பாடசாலை ஒன்றின் பெண் அதிபரை தனது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அழைத்து, அச்சுறுத்தி, தனக்கு முன்னால் முட்டுக்காலில் நிற்கும்படி பணித்தார் என்று முதலமைச்சருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக் குறித்து விசாரணை நடத்தும்படி பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த விசாரணை பக்கச் சார்பற்ற முறையில் நடப்பதற்கு வசதியாக ஊவா மாகாணக் கல்வி அமைச்சின் நடவடிக்கைகளை ஆளுநரின் கீழ் கொண்டு வருமாறும் ஜனாதிபதி ஊவா மாகாண ஆளுநருக்குப் பணிப்புரை விடுத்திருக்கின்றார்.

தான் குறிப்பிட்ட மாணவர் ஒருவருக்கு பாடசாலையில் அனுமதி வழங்க மறுத்தார் என்பதற்காகவே முதலமைச்சர் இவ்வாறு கல்லூரி அதிபரை அச்சுறுத்தினார் என்று கூறப்படுகின்றது.

இவ்விடயம் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவ்விடயம் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், கட்சி ரீதியான விசாரணையை நடத்தும் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஏற்கனவே அறிவித்திருந்தார் என்பது தெரிந்ததே. (உ)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

தல் ஆணையாளர் கூல் செயற்படுகிறார் எனவும் தேர்தல் முடிவடைந்த பின்னர் தமக்கு எதிரான நடவடிக்கை களுக்கு தாமும் பதில் வழங்கத் தயாராக இருக்கின்றார்கள் எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் யாழ்.மாநகரசபையின் முதன்மை வேட்பாளருமாகப் போட்டியிடுகின்ற சட்டத்தரணி மணிவண்ணன் கடந்த வாரம் இடம்பெற்ற தமது தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டின் போது பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார்.

இதனால் தனக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளரான இரட்ண ஜீவன் கூல் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்திருந்தார். அத்தோடு மேற்படி விடயங்கள் குறித்து தேர்தல் ஆணைக்குழுவிற்கும், தேர்தல் கண்காணிப்பு குழுக்களில் ஒன்றான 'பவ்ரல்' அமைப்பிற்கும் அவர் தெரியப்படுத்தியிருந்தார்.

இதனையடுத்து, இந்த விடயம் குறித்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு பொலிஸ்மா அதிபரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய நேற்று யாழ்ப்பாணப் பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தேர்தல் ஆணையாளரான கூலிற்கு எதிராகக் கருத்து வெளியிட்ட மேற்படி கட்சியின் தேசிய அமைப்பாளரான சட்டத்தரணி மணிவண்ணன், யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு அவரிடம் வாக்கு மூலம் பதியப்பட்டது.

அக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் குறித்து முதற்கட்ட விசாரணைகளின் போது சேர்க்கப்பட்டதாக அறியவந்தது.

## தெற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

ணுவம் இப்போது தயார் நிலையில் உள்ளது."

"ஆனால் தமிழர்களின் பாரம்பரியத்தை அழிக்கவென திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற – அரச ஏற்பாட்டிலான – சிங்களக் குடியேற்றம் மட்டுமே நிறுத்தப்படாமல் தொடருகின்றது; அது தொடரும்."

–இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

வாராந்தம் தாம் வழங்கும் 'வாரத்திற்கொரு கேள்வி' பகுதிக்கு அவர் அனுப்பி வைத்த பதிலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேள்வி : தமிழ்க் கட்சிகள் – ஏன் நீங்களும் கூட – வடமாகாணத்தில் சிங்கள மக்கள் குடிகொள்ளப் பார்க்கின்றார்கள், எமது பாரம்பரியம் அழியப் போகின்றது என்றெல்லாம் குரல் எழுப்புகின்றீர்கள். தமிழராகிய நாம் பெருவாரியாக கொழும்பில் குடியிருக்கின்றோமே. அதனை சிங்களப் பாரம்பரியத்தை அழிப்பதாக அர்த்தம் கொள்ள முடியாதா? நீங்கள் உங்கள் கூக்குரல்களால் கொழும்பில் வசிக்கும் எம்மையெல்லாம் அவதிக்குள்ளாக்கின்றீர்கள் என்பதை ஏன் புரிந்து கொள்ள மாட்டீங்கள்?

– என்று அவரிடம் இவ்வாரம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளிக்கையிலேயே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் எப்படி மேற்கொள்ளப்படுகின்றன, அவற்றின் பின்புலம் யாது, அவை எவ்வாறு தமிழர் பாரம்பரியத்தைக் காவு கொண்டிருக்கின்றன என்பவற்றையெல்லாம் விலாவாரியாகத் தமது பதிலில் விளக்கியிருக்கின்றார் முதல்வர் விக்னேஸ்வரன்.

அவரின் முழுமையான பதில் நாளைய 'காலைக் கதிரில்' பிரசுரமாகும். (உ)

## முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

தழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரபலம் தேடுவதற்காக பல வேட்பாளர்கள் எனது பெயரைப் பயன்படுத்துகின்றனர்.

அவ்வாறு செய்ய வேண்டாம் என்று அவர்களிடம் கூறியுள்ளேன். தேர்தல் தொடர்பாக எனக்கு எந்தக் கருத்தும் இல்லை.

ஆனால், எனது பெயரைப் பயன்படுத்தி வேட்பாளர்கள் வெற்றி பெற்றாலும், தோல்வியுற்றாலும், அது என்னை மட்டுமே பாதிக்கும் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

கிண்ணையடியில் நடைபெற்ற போது உரையாற்றுகையில் அங்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

அரசாங்கத்தினுடைய பங்காளிக் கட்சியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை விட, மூன்று மடங்கு அதிகமாக உள்ள மஹிந்த அணிக்கு, எதிர்க்கட்சி தலைவர் பதவியைக் கொடுக்காமல் சம்பந்தனுக்கு அது வழங்கப்பட்டுள்ளது.

எமது பங்காளிக் கட்சியைச் சேர்ந்தவரை எதிர்க்கட்சித் தலைவராக வைத்திருந்தால் நாங்கள் செய்யும் அரசியல் மோசடிகளை மூடி மறைப்பதற்கு அது உதவும் என்ற காரணத்திற்காக, எதிர்க்கட்சி தலைவர் பதவியை அவருக்கு வழங்கியுள்ளது அரசுத்தரப்பு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து ஓர் அரசமைப்பை உருவாக்கியுள்ளது. இந்த அரசமைப்பு முற்றுமுழுதாக ஒற்றையாட்சிக் குரியதாக உள்ளது. சாதாரண மக்களுக்கு இதன் நுணுக்கங்களை விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்காது.

ஒற்றையாட்சி முறையில் சிங்கள மக்களினுடைய கையில் தான் ஆட்சி இருக்கும். இந்த நாட்டில் 75 வீதத்திற்கு மேலாக சிங்கள மக்களின் சனத்தொகை இருக்கின்ற நிலையில், ஆட்சி அதிகாரம் ஒரு மையத்தில் இருக்குமான இருந்தால், அந்த 75 வீதமான மக்களின் விருப்பத்தின் படிதான் அதிகாரம் பயன்படுத்தப்படும்.

ஒற்றையாட்சி முறையை சிங்கள மக்களின் கையில் கொடுத்திருக்கின்ற படியால்தான், தென் தமிழ்த் தேச மண் பறிபோயுள்ளது. ஒட்டுமொத்த இலங்கைத்தீவும், பௌத்த நாடு என அவர்கள் நினைக்கிறார்கள். வடகிழக்கில் தமிழ் மக்கள் வாழ்வது, பௌத்த நாட்டின் கனவுக்குச் சவாலாக இருக்கின்றது.

தமிழ் மக்களின் வடகிழக்கு தாயகப் பிரதேசம் இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்று தென்னிலங்கை விரும்புகிறது. தமிழ் மக்கள் வடக்கு – கிழக்கில் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றமையால், அவர்களுக்கு அங்கு சர்வதேச சட்டத்தின் படி ஆட்சி உரிமை இருக்கின்றது என்பது தென்னிலங்கைக்குத் தெரியும்.

ஒரு காலகட்டத்தில் சர்வதேசம் தமிழ் மக்களுக்கு சர்வதேச சட்டத்தின் படியான ஆட்சி உரிமையை அங்கீகரிக்கக்கூடும்.

அப்படி அங்கீகரித்தால் ஒட்டுமொத்த இலங்கைத் தீவும் சிங்களம் என்ற கனவு இல்லாமல் போகும்.

பிரித்தானியர் நாட்டை விட்டு வெளியேறியதில் இருந்து ஒற்றையாட்சி அரசமைப்பை உருவாக்கி சிங்கள தலைவர்கள் ஆட்சி செய்து, எங்களது தாயக நிலப்பரப்பை பறித்துக் கொண்டிருக்கின்றார்கள். – என்றார்.

## கஞ்சாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனை சாவடியில், பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

அல்லக்கை. நட்புரிமையுடன் என் மீது பாய்ந்தார்.

"என்ன அண்ணே நீங்கள், கூட்டமைப்பின் எம்.பிமார் ஒவ்வொருவரும் தலா இரண்டு கோடி ரூபாகையூட்டு – லஞ்சம் – வாங்கினவையள் எண்ட மாதிரி செய்தி போட்டியிருக்கிறியள். அவை வழக்குப் போட்டா என்ன செய்வியள்...?" – என்று சீறினார் அவர்.

"என்ன செய்தி? எங்கே போட்டிருக்கிறம்?" – என்று தெரியாத மாதிரிக் கதைவிட்டேன்.

"அதுதான் சிவசக்தி ஆனந்தன் சொன்னார் என்று முன் பக்கத்திலை போட்டியிருக்கிறியள்.... உங்கடை பேப்பரை நீங்களே வாசிக்கிறது இல்லையோ...? " – என்று பதிலடி தந்தார் அவர்.

"தங்கடை பேப்பரிலை என்ன வருகுது எண்டு பார்க்காமல், பேப்பரைக் காட்டி அரசியல் செய்யிறவையள் உங்கடை பக்கத்திலை இருக்கினம். நாங்கள் அப்படியில்லை. எங்கடை பேப்பரிலை வந்த செய்தியை நாங்கள் வாசிக்கிறமோ இல்லையோ, அதிலை வந்த ஒவ்வொருவரிக்கும் நாங்கள்தான் பொறுப்பு என்றதை உணர்ந்துதான் கடமையைச் செய்யிறம். றிப்போட்டர்மாரிலை பொறுப்பை மாட்டிவிட்டு கழன்று கொள்ளுகிற ஆக்கள் நாங்கள் இல்லை." என்று அவருக்கு ஒரு குட்டி லெக்ஸர் அடித்தேன். பிறகு விடயத்துக்கு வந்தேன்.

"யாரும் 2கோடி ரூபா லஞ்சம் வாங்கினார்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. சரியாகச் செய்தியை வாசித்துப் பாரும். வரவு – செலவுத் திட்டத்துக்கு சார்பாக வாக்களிப்பதற்கு பிரதமரின் கீழான அமைச்சுக்கு ஊடாக ஒவ்வொருவருக்கும் தலா 2 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றுதான் சிவசக்தி ஆனந்தன் பேசியிருக்கின்றார். கூட்டமைப்பில் அவருக்கு மட்டும் இல்லாமல், ஏனைய எம்.பிமாருக்கு அந்த ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிறது என்றால், அது ஒரு வகையில் அரசியல் லஞ்சம் தானே? இதுபற்றி கடந்த ஒரு மாத காலமாகத் தான் பகிரங்கக் கூட்டங்களில் பேசி வருகின்றார் என்றும், கூட்டமைப்பின் ஒரு எம்.பியும் பதிலாக வாய் திறக்கவேயில்லை என்றும் அவர் பகிரங்கமாகச் சொல்லியுமிருக்கின்றார். இந்த அரசியல் லஞ்சம் இடம்பெறவில்லை என்றால் – இது அரசியல் லஞ்சம் இல்லை என்றால் – உங்கள் ஆளை மறுக்கச் சொல்லுங்களேன். நாங்கள் விலாவாரியாக அவரின் பதிலையும் பிரசுரிப்போம்." – என்றேன்.

கப்–சிப் என்று அடங்கித் தொலைபேசியை வைத்துவிட்டார் அவர்.

-மின்னல்-

## கதிர்காமத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

நேற்றுக் காலை கதிர்காமம் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் ஒன்று திரண்டனர். அக்கூட்டம் பின்னர் களேபரத்தில் ஈடுபட்டதால் அங்கு கலவரம் வெடித்தது. பொலிஸ் நிலையம் மீது மக்கள் கூட்டம் தாக்குதலும் நடத்தியது.

நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காகப் பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசித் தடியடி நடத்தினர். 13 பெண்கள் உட்பட 58 பேர் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்பட்டது.

கதிர்காமம் நகருக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரின் ஆணையை மீறிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மீதே பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்றும் –

காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்றும் –

அதன் பின்னரே நேற்றுக் காலை களேபரம் வெடித்தது என்றும் – கூறப்பட்டது.

துப்பாக்கிச் சூடு நடத்திய பொலிஸ் அலுவலர் கைது செய்யப்பட்டு 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைய விசேட உயர்மட்டக் குழு ஒன்று கதிர்காமம் விரைந்துள்ளது.

(மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)

## ஆனைக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

வீடொன்றில் தனிமையில் வசித்து வந்த ஜெகநாதன் சத்தியபாமா (வயது–72) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் குறித்து தெரிய வருபவை வருமாறு:–

இந்தப் பெண்ணின் கணவர் ஏற்கனவே இறந்துள்ள நிலையில், மகனொருவர் மட்டுமே அவருக்கு தற்போது இருக்கின்றார். ஆயினும், அவரும் தற்போது வன்னியில் வசித்து வருகின்றார்.

இதனால் அந்த வீட்டில் அவர் தனிமையிலேயே வசித்து வந்தார். அவரது உறவினர்கள் அவருக்கு உணவுகளை வழங்கி வந்தனர். நேற்று மதியமும் அவருக்கு உணவினை உறவினர்கள் வழங்கியிருந்தனர்.

நேற்று இரவு நேர உணவை வழங்குவதற்காக வீட்டிற்குச் சென்ற போது வீட்டின் கதவுகள் உடைக்கப்பட்டு வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளமையை உறவினர்கள் அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸாரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அப் பெண்ணின் காது மற்றும் கைகளில் இருந்த நகைகள் காணாமல் போயிருக்கின்றன எனவும் மேலும் ஏதாவது காணாமல் போயிருக்கின்றனவா என்பது குறித்துத் தெரியவில்லை என்று உறவினர்கள் கூறினர். மேலும் உயிரிழந்த பெண்ணின் தலையில் காயங்கள் இருக்கின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் கொலையாக இருக்கலாம் எனக் கருதி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மயானத்துக்கு அருகில் தீ பரவல் ஏற்பட்டதால் பரபரப்பு!





மன்னார் பொது மயானத்திற்கு பின் பகுதியில் குவித்து வைக்கப்பட்டிருந்த குப்பை மீது தீ பரவல் ஏற்பட்டதால் அங்கு பரபரப்பு நிலவியது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை இடம்பெற்றுள்ளதுடன், இதன்போது மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியூடான போக்குவரத்து நீண்ட நேரம் பாதிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள மன்னார் பொது மயானத்துக்குப் பின் பகுதியில் மன்னார் நகரில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருள்கள் மன்னார் நகர சபையால் கொட்டப்படுகின்றன.

இந்த நிலையில், இந்தக் கழிவுப் பொருள்களான குப்பையில் நேற்று முன்தினம் மாலை திடீர் என தீப் பரவல் ஏற்பட்டுள்ளது.

இதன் போது அங்கு குவிக்கப்பட்டிருந்த குப்பைகள் எரிய தொடங்கியுள்ளன. இதனால் அப் பகுதி பெரிய புகை மண்டலமாக காணப்பட்டது.

இதனால், இந்த7 வீதியூடான போக்குவரத்து நீண்ட நேரமாக பாதிப்படைந்ததோடு, அந்தப் பகுதியில் வசித்து வரும் மக்கள் மூச்சுத்திணறலுக்கு உள்ளாகியதோடு, பல்வேறு அசௌரியங்களுக்கு ஆளாகினர் குறிப்பாக அந்தப் பகுதியில் வசித்து வரும் சிறுவர்கள், வயோதிபர்கள் மற்றும் கர்ப்பிணிகள் என அனைவரும் பல்வேறு அசௌ கரியங் களுக்கு முகம் கொடுத் துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மன்னார் நகர சபையின் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உடனடியாக பௌசர் மூலம் நீர் கொண்டு செல்லப்பட்ட தீ அணைக்கப்பட்டது.

குப்பைகளில் காணப்பட்ட இரும்பு பொருள்களை எடுக்க சில சிறுவர்கள் முயற்சி செய்தனர் என்றும் இதன் போது அவர்கள் பற்ற வைத்த தீயே குப்பைமேட்டில் பரவியதாக நகர சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

# சிங்கள திரைத்துறைக்கு நேற்றுடன் வயது 71



கொழும்பு, ஜன. 22

இலங்கையின் முதலாவது சிங்கள பேசும் திரைப்படமான கடவுனு பொறந்துவ முதன் முறையாக வெளியிடப்பட்டு நேற்றுடன் 71 வருடங்கள் நிறைவடைந்தன.

'கடவுனு பொறந்துவ' (நிறைவேற்றப்படாத வாக்குறுதி) என்ற இலங்கையின் முதலாவது சிங்கள பேசும் படம், 1947 ஆம் ஆண்டு ஜனவரி 21 திகதி, கொழும்பு கொட்டாஞ்சேனை கிங்ஸ்லி திரையரங்கில், முதல் முறையாக திரையிடப்பட்டது.

இந்தப் படத்தை இலங்கைத் தமிழரான எஸ்.எம்.நாயகம் தயாரிக்க, யோதிஸ்சிங் என்ற இந்தியர் இயக்கினார். டெய்சி டானியர் என்ற கத்தோலிக்கத் தமிழ் பெண், இதில் கதாநாயகியாக நடித்து சிங்களத் திரையுலகில் முடிசூடா ராணியாகத் திகழ்ந்தார்.

சிங்கள திரைப்படத்துறையின் 71 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் தொடர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

இதில் முக்கிய வைபவம் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில், அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே மற்றும் திரைப்படத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பலர் கலந்துகொண்டனர்.

# 'செவன' அலுவலகத் திட்டம் 2020 ஆம் ஆண்டு பூர்த்தி!

கொழும்பு, ஜன. 22

'செவன' அலுவலகத் திட்டம் 2020 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் 'கிராம இராஜ்ய' எண்ணக்கரு விற்கமைய, நாடு முழுவதிலுமுள்ள சுமார் 14 ஆயிரம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட உள்ள உத்தியோகபூர்வ 'செவன' அலுவலகத் திட்டம் 2020 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்படும்.

இதன் மூலம் அனைத்து அரச அதிகாரிகளும் ஒரே கூரையின் கீழ் பொதுமக்களுக்குச் சேவையாற்றும் சந்தர்ப்பம் ஏற்படுமென்று உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

# பரப்புரை சுவரொட்டி ஒட்டிய இருவர் கைது!

**நேற்று முன்தினம் கோப்பாயில்**

கோப்பாய், ஜன. 22

தேர்தல் விதிமுறைகளை மீறி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பரப்புரை சுவரொட்டிகளை ஒட்டினார்கள் என்ற சந்தேகத்தில் இரண்டு பேர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிய போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பெயர் பொறிக்கப்பட்ட 25 நோட்டீஸ்கள் கைப்பற்றப்பட்டன என்றும் விசாரணைகளின் பின்னர் இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அடுத்த மாதம் பத்தாம் திகதி நடைபெறவுள்ள நிலையில் கட்சிகள் தமது பிரசார நடவடிக்கைகளை மும்முரமாக முன்னெடுத்துள்ளன.

கட்சிகளின் வட்டார அலுவலகங்கள் தவிர்ந்து வேறு இடங்களில் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டுவது சட்டப்படி குற்றமாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஜன. 22

தமிழ்த் தேசிய விடுதலை கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுகமும், முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டமும் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றன.

கிளிநொச்சி பொதுச் சந்தையில் நேற்று மாலை இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எல். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் மற் றும் வேட்பாளர்கள் உள் ளிட்ட பலர் கலந்து கொண் டனர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










IIS City Campus கல்வி நிறுவனத்தின் 2017/2018 ஆண்டுகளுக்கான பட்டமளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ரில்கோ ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வு நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி குலரட்னம் விக்னேஷ் தலைமையில் இடம்பெற்றது. கௌரவ விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரையுரையாளர் கலாநிதி கே.தபோதரன் கலந்து கொண்டார்.

கணினி விஞ்ஞானம், வியாபார முகாமைத்துவம், குடிசார் பொறியியல் ஆகிய துறைகளில் உயர்தேசிய டிப்ளோமா, இளமாணி மற்றும் முதுமாணி பட்டக்கல்விகளை நிறைவு செய்த மாணவர்களுக்கு பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு சிறப்பு சித்தியெய்திய மாணவர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டன.




## கண்ணீர் அஞ்சலி



### அமரர் சிரந்த விராஜ் கூரே

வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ றெஜினோல்ட் கூரே அவர்களின் சகோதரர் சிரந்த விராஜ் கூரே அவர்கள் காலமானார். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் ஆளுநரின் துயரத்தில் வட மாகாண தமிழ் மக்களாகிய நாமும் பங்கு கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று 22.01.2018 பிற்பகல் 2.30 மணிக்கு Gurugedara, Kapugedara Road, Uggalboda, Kalutara North எனும் முகவரியில் நடைபெறவுள்ளது.

வட மாகாண மக்கள் சார்பாக
எஸ்.முரளி
077 300 0967
076 823 5343




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.